# பெயர்ச்சொல்

# பெயர்ச்சொல்

# பொருளடக்கம்


- A0211 பெயர்ச்சொல்
- பாட ஆசிரியரைப் பற்றி
- பாடம் - 1 A02111 சொல்லின் பொது இலக்கணம்
- பாட அமைப்பு
- 1.0 பாட முன்னுரை
- 1.1 சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டவை
- 1.2 பகுப்பை அடிப்படையாகக் கொண்டவை
- 1.3 இலக்கண வகைச் சொற்கள்
- 1.4 இலக்கிய வகைச் சொற்கள்
- 1.5 தொகுப்புரை
- பாடம் - 2 A02112 திணை, பால், எண், இடம்
- பாட அமைப்பு
- 2.0 பாட முன்னுரை
- 2.1 திணை
- 2.2 பால்
- 2.3 எண்
- 2.4 இடம்
- 2.5 தொகுப்புரை
- பாடம் - 3 A02113 பெயர்ச்சொல்
- பாட அமைப்பு
- 3.0 பாட முன்னுரை
- 3.1 பெயர்ச்சொல்
- 3.2 பெயர்ச்சொல் வகைகள்
- 3.3 வினையாலணையும் பெயர்
- 3.4 ஆகுபெயர்
- 3.5 தொகுப்புரை
- பாட ஆசிரியரைப் பற்றி
- பாடம் - 4 A02114 பொதுப்பெயர்கள்
- பாட அமைப்பு
- 4.0 பாட முன்னுரை
- 4.1 பால்பகா அஃறிணைப் பெயர்கள்
- 4.2 இருதிணைப் பொதுப்பெயர்கள்
- 4.3 இடப்பெயர்கள் எண் உணர்த்தல்
- 4.4 எண்ணால் வரும் உயர்திணைப் பெயர்கள்
- 4.5 தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும்
- 4.6 தொகுப்புரை
- பாடம் - 5 A02115 வேற்றுமை - 1
- பாட அமைப்பு
- 5.0 பாட முன்னுரை
- 5.1 வேற்றுமை - விளக்கமும் வகைகளும்
- 5.2 முதல் வேற்றுமை
- 5.3 இரண்டாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்
- 5.4 மூன்றாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்
- 5.5 நான்காம் வேற்றுமையும் அதன் பொருள்களும்
- 5.6 தொகுப்புரை

- பாடம் - 6 A02116 வேற்றுமை - 2
- பாட அமைப்பு
- 6.0 பாட முன்னுரை
- 6.1 ஐந்தாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்
- 6.2 ஆறாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்
- 6.3 ஏழாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்
- 6.4 எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை
- 6.5 வேற்றுமை தொடர்பான பிற கருத்துகள்
- A02111 தன் மதிப்பீடு : விடைகள் - I
- A02111 தன் மதிப்பீடு : விடைகள் - II
- A02112 தன் மதிப்பீடு : விடைகள் - I
- A02112 தன் மதிப்பீடு : விடைகள் - II
- A02113 தன் மதிப்பீடு : விடைகள் - I
- A02113 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
- A02114 தன் மதிப்பீடு : விடைகள் - I
- A02114 தன் மதிப்பீடு : விடைகள் - II
- A02115 தன் மதிப்பீடு : விடைகள் - I
- A02115 தன் மதிப்பீடு : விடைகள் - II
- A02116 தன் மதிப்பீடு : விடைகள் - I
- A02116 தன் மதிப்பீடு : விடைகள் - II

# A0211 பெயர்ச்சொல்

1. சொல்லின் பொது இலக்கணம்
2. திணை, பால், எண், இடம்
3. பெயர்ச்சொல்
4. பொதுப்பெயர்கள்
5. வேற்றுமை – 1
6. வேற்றுமை – 2

# பாட ஆசிரியரைப் பற்றி



முனைவர் இராசபாண்டியன்

கல்வித்தகுதி : எம்.ஏ, எம்.பில், பி.எட், பி.எச்.டி.,
- இதழியலில் சான்றிதழ்

பணி : சென்னை நந்தனம், அரசுக் கலைக் கல்லூரியிலிருந்து பகராண்மையில் தமிழ் இணையப்பல்கலைக்கழகத்தில் உதவி இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

படைப்புகள் : மூன்று நாவல்கள், இரண்டு கவிதைத் தொகுப்புகள் உட்பட 20 நூல்கள் எழுதி யுள்ளார்.
- தமிழ் வார இதழ்களில் சிறுகதைகள் எழுதி வருகிறார்.
- 50 ஆய்வுக்கட்டுரைகள் படைத்துள்ளார்.

சிறப்புகள் : 1. இராஜபாளையம் திருவள்ளுவர் மன்றம் வழங்கிய ‘கதைச் செம்மணி’ என்ற விருது.
2. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் வழங்கிய விருது.



முனைவர் சொக்கலிங்கம்

கல்வித்தகுதி : எம்.ஏ, எம்.பில், பிஎச்.டி.,

எம்ஃபில் தலைப்பு : அண்ணாவின் மொழித்திறன்கள் (சொற்பொழிவுகள்)

பிஎச்.டி தலைப்பு : தமிழன்பன் கவிதைகளில் சமுதாயம்

பணி : தமிழ் விரிவுரையாளர் (தேர்வு நிலை)
சர். தியாகராயர் கல்லூரி,
சென்னை – 600 021.

படைப்புகள் : இறைவன் தீர்ப்பு, குடும்ப விளக்கு ஆகிய தலைப்புகளில் நாடகம் எழுதியுள்ளார்.

முன்

## பாடம் - 1

# A02111 சொல்லின் பொது இலக்கணம்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

சொல்லின் பொது இலக்கணத்தை விளக்குகிறது. சொல், கிளவி, மொழி, பதம் என்னும் சொற்கள் சொல் என்னும் ஒரே பொருளைக் கொண்டவை என்று எடுத்துரைக்கிறது.

சொற்பொருளை அடிப்படையாகக் கொண்ட சொற்கள், பகுப்பை அடிப்படையாகக் கொண்ட சொற்கள், இலக்கண வகைச் சொற்கள், இலக்கிய வகைச் சொற்கள் ஆகியவற்றை விளக்குகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- சொல்லின் பொது இலக்கணத்தை அறிந்து கொள்ளலாம்.
- சொல், கிளவி, மொழி, பதம் என்னும் சொற்கள் ஒரே பொருளைக் கொண்டவை என்று தெரிந்து கொள்ளலாம்.
- சொற்பொருளை அடிப்படையாகக் கொண்ட சொல் வகைகளைத் தெரிந்து கொள்ளலாம்.
- பகுப்பை அடிப்படையாகக் கொண்ட பத வகைகளை அறிந்து கொள்ளலாம்.
- இலக்கண வகைச் சொற்களையும் இலக்கிய வகைச் சொற்களையும் புரிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை

1.1 சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டவை

1.2 பகுப்பை அடிப்படையாகக் கொண்டவை

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

1.3 இலக்கண வகைச் சொற்கள்

1.4 இலக்கியவகைச் சொற்கள்

1.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 1.0 பாட முன்னுரை

சொல்லின் பொது இலக்கணம் என்னும் இந்தப் பாடத்தில் தமிழ் மொழியில் உள்ள சொல்லின் இலக்கணத்தைப் பார்ப்போம்.

ஒரு மொழிக்கு அடிப்படை அம்மொழியில் உள்ள எழுத்துகள் ஆகும். எழுத்துகள் ஒன்றோ பலவோ சேர்ந்து சொல் உருவாகும். ஒரு சொல் தனித்து நின்றோ அல்லது பல சொற்கள் சேர்ந்து நின்றோ சொற்றொடர் உருவாகும். இவ்வாறு ஒரு மொழியின் படிநிலைகள் அமையும்.

மேலே குறிப்பிடப்பட்ட படிநிலைகளில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட சொல், தமிழில் பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறது.

கிளவி

மொழி

பதம்

என்பவை சொல் என்னும் ஒரே பொருளைத் தருவன ஆகும்.

தமிழில் சொற்கள் ஓர் எழுத்தாலும் பல எழுத்துகளாலும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்ப்போமா?

ஓர் எழுத்து ஒரு சொல் = பூ, வா, ஆ

இரண்டு எழுத்து ஒரு சொல் = நட, நில், படி

மூன்று எழுத்து ஒரு சொல் = நிலம், அறம், கடன்

நான்கு எழுத்து ஒரு சொல் = கடவுள், இறைவன், வேந்தன்

இவ்வாறு மட்டும் அல்லாமல் தமிழில் நான்குக்கு மேற்பட்ட எழுத்துகளாலும் சொற்கள் உருவாக்கப்படும்.

இந்த முறையில் ஆக்கப்பட்ட தமிழ்ச் சொற்களைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். அவற்றை இங்கே காண்போம்.
1) சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டவை.
2) பகுப்பை அடிப்படையாகக் கொண்டவை.
3) இலக்கண வகைச் சொற்கள்.
4) இலக்கிய வகைச் சொற்கள்.
ஆகியவை அந்த வகைகள் ஆகும்.

## 1.1 சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டவை

இந்தப் பாடத்தின் முன்னுரையில் மொழி என்னும் சொல்லும் சொல்லைக் குறிக்கும் என்று பார்த்தோம். இங்கே சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டவற்றைப் பற்றி விரிவாகக் காண்போம். சொற்பொருள் அடிப்படையில் மொழி/சொல் மூன்று வகைப்படும். அவை,

1) தனிமொழி

2) தொடர்மொழி

3) பொதுமொழி

என்பவை ஆகும்.

### 1.1.1 தனிமொழி

ஒரு சொல் தனித்து வந்து ஒரு பொருளைத் தந்தால் அது தனிமொழி எனப்படும்.

(எ.கா) ஆ, வா, நில், படித்தான்.

இங்கே, எடுத்துக்காட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தனிச்சொல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைத் தந்து வந்துள்ளன.

### 1.1.2 தொடர்மொழி

தனிமொழிகள் பல தொடர்ந்து வந்து பொருளைத் தந்தால் அது தொடர்மொழி எனப்படும்.

(எ.கா)

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்

இங்கே தனிச்சொற்கள் பல சேர்ந்து வந்து பொருளைத் தந்துள்ளன.

### 1.1.3 பொதுமொழி

ஒரு சொல்லே தனிமொழியாக நின்று ஒரு பொருளையும், தொடர்மொழியாகப் பிரிந்து நின்று ஒன்றுக்கு மேற்பட்ட பொருளையும் தந்தால் அது பொதுமொழி எனப்படும். அதாவது, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக ஒரு சொல் வருவது.

(எ.கா) தாமரை

தாமரை என்னும் ஒரு சொல், தனிமொழியாக நின்று தாமரை மலர் என்னும் பொருளைத் தரும்.

தாமரை என்னும் ஒரு சொல்லையே தா+மரை என்றும் பிரிக்கலாம். இவ்வாறு

பிரித்தால் தாவுகிற மான் என்னும் தொடர்மொழியாகப் பொருளைத் தருகிறது. ‘தா’ என்னும் சொல் இங்கே தாவுதலையும் ‘மரை’ என்னும் சொல் மானையும் குறிக்கிறது.

ஒருமொழி ஒரு பொருளனவாம் தொடர்மொழி
பல பொருளன பொது இருமையும் ஏற்பன
(நன்னூல் : 260)

ஒரு பொருளைத் தரும் ஒருசொல், ஒருமொழியாம். இரண்டு முதலிய சொற்களாய்த் தொடர்ந்து நின்று இரண்டு முதலான பல பொருள்களைத் தருவன தொடர்மொழியாம். ஒன்றாய் நின்று ஒரு பொருளைத் தந்தும் தொடர்ந்து நின்று பல பொருளைத் தந்தும் இரண்டுக்கும் பொதுவாய் வருவது பொதுமொழியாம்.

## 1.2 பகுப்பை அடிப்படையாகக் கொண்டவை

பகுப்பை அடிப்படையாகக் கொண்டு சொற்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை,

1) பகுபதம்

2) பகாப்பதம்

என்பவை ஆகும். பதம் என்னும் சொல்லும் சொல்லைக் குறிக்கும் வேறு ஒரு சொல் என்பதை முன்னுரையில் ஏற்கெனவே பார்த்தோம்.

### 1.2.1 பகுபதம்

ஒரு சொல்லைப் பகுதி, விகுதி முதலிய உறுப்புகளாகப் பகுக்க (பிரிக்க) முடிந்தால் அது பகுபதம் எனப்படும்.

(எ.கா) அறிஞன், செய்தாள்

### 1.2.2 பகாப்பதம்

ஒரு சொல்லைப் பகுதி, விகுதி முதலிய உறுப்புகளாகப் பகுக்க முடியவில்லை என்றால் அது பகாப்பதம் எனப்படும்.

(எ.கா) மரம், தேன், தலை, போல, சால

### 1.2.3 பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதியாகப் பிரிக்கப்படும் சொல்லில் பல உறுப்புகள் இருக்கும். அவற்றைப் பகுபத உறுப்புகள் என்று கூறுவர்.

(எ.கா) வந்தனன்

இது ஒரு பகுபதம். இந்தச் சொல்லை,

வா+த்(ந்)+த்+அன்+அன்

என்று பிரிக்கலாம். இந்தச் சொல்லில் ஐந்து பிரிவுகள் உள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர்கள் உள்ளன. இந்தப் பெயர்களைத் தான் பகுபத உறுப்புகள் என்று பொதுவாகக் கூறுகிறோம். அந்தப் பகுபத உறுப்புகள் யாவை என்பதைப் பார்ப்போமா?

(1) பகுதி

(2) விகுதி

(3) இடைநிலை

(4) சாரியை

(5) சந்தி

(6) விகாரம்

என்னும் ஆறும் பகுபத உறுப்புகள் ஆகும்.

- பகுதி

ஒரு பகுபதத்தின் முதலில் இருப்பது பகுதி எனப்படும். பகுபதத்தில் உள்ள பகுதி பொருள் உடையதாக இருக்கும்.

(எ.கா) வந்தனன்

வா+த்(ந்)+த்+அன்+அன்

இதில் வா என்பது பகுதி ஆகும். வா என்னும் பகுதிக்கு வா என்று அழைக்கும் பொருள் இருக்கிறது. எனவே இது பகுதி ஆகும்.

- விகுதி

பகுபதத்தில் இறுதியில் இருக்கும் உறுப்பு விகுதி எனப்படும். விகுதி என்றால் இறுதி என்று பொருள்.

வா+த்(ந்)+த்+அன்+அன்

இதில் இறுதியில் உள்ள அன் விகுதி ஆகும்.

- இடைநிலை

பகுபதத்தில் இடையில் இருக்கும் உறுப்பு இடைநிலை எனப்படும்.

வா+த்(ந்)+த்+அன்+அன்

இதில் இடையில் இருக்கும் உறுப்பாகிய த் இடைநிலை ஆகும்.

- சாரியை

பகுபதத்தில் இடைநிலைக்கும், விகுதிக்கும் இடையில் வருவது சாரியை எனப்படும்.

வா+த்(ந்)+த்+அன்+அன்

இதில் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் இருக்கும் அன் என்பது சாரியை ஆகும்.

- சந்தி

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது சந்தி எனப்படும்.

வா+த்(ந்)+த்+அன்+அன்

இதில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் உள்ள த்(ந்) சந்தி ஆகும்.

- விகாரம்

பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாறுதல்கள் விகாரம் எனப்படும். விகாரம் என்றால் மாறுபாடு என்று பொருள்.

வந்தான்

வா+த்(ந்)+த்+அன்+அன்

இதில் சந்தியாக இடம் பெற்றுள்ள த் என்னும் எழுத்து ந் ஆக மாறியுள்ளது. பகுதியாக இடம் பெற்றுள்ள வா என்னும் எழுத்து ‘வ’ என்று மாறியுள்ளது. இவ்வாறு மாறுபட்டு வருவது விகாரம் எனப்படும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.3 இலக்கண வகைச் சொற்கள்

சொற்களுக்கு உரிய இலக்கண வகையால் சொற்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை,

1) பெயர்ச்சொல்

2) வினைச்சொல்

3) இடைச்சொல்

4) உரிச்சொல்

என்பவை ஆகும்.

### 1.3.1 பெயர்ச்சொல்

ஐம்பொறிகளாலும் உள்ளத்தாலும் உணரும் பொருள்களைக் குறிப்பவை பெயர்ச் சொற்கள் எனப்படும்.

(எ.கா) மண், மேடு, திங்கள், கிளை, வட்டம், ஆடுதல்

### 1.3.2 வினைச்சொல்

ஒரு பொருளின் வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

(எ.கா) வளவன் வந்தான்

இதில் வந்தான் என்பது வினைச்சொல் ஆகும்.

### 1.3.3 இடைச்சொல்

தனித்து இயங்கும் ஆற்றலின்றிப் பெயருடனோ வினையுடனோ சேர்ந்து வரும் சொல் இடைச்சொல் எனப்படும்.

(எ.கா)

அவனுக்குக் கொடுத்தான்
அவன் + கு + கொடுத்தான்.

இதில், கு என்பது இடைச்சொல்லாக இடம்பெற்றுள்ளது.

### 1.3.4 உரிச்சொல்

பெயர் வினைகளை விட்டு நீங்காமல் செய்யுளுக்கே உரியதாய் வரும் சொல் உரிச்சொல் எனப்படும்.

(எ.கா) சால, உறு, தவ, நனி, கடி, கூர், கழி

அதுவே,

இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை
என இரண்டு ஆகும் இடை உரி அடுத்து
நான்குமாம் திசை வடசொல் அணுகா வழி

*(நன்னூல் : 270)*

இயற்சொல், திரிசொல் என்னும் தன்மை கொண்ட பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என்று சொல்வகை இரண்டாகும். இடைச்சொல், உரிச்சொல்லுடன் சேர்ந்து நான்கும் ஆகும். இவற்றுடன் திசைச் சொல்லும் வடசொல்லும் சேரவில்லை என்றால் சொல்வகை நான்கு ஆகும்.

இந்த நூற்பாவின் மூலம் இலக்கணவகைச் சொற்களையும் இலக்கிய வகைச் சொற்களையும் நன்னூல் தெரிவித்துள்ளது.

## 1.4 இலக்கிய வகைச் சொற்கள்

இலக்கியங்களில் இடம் பெறும் சொற்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை,

1) இயற்சொல்

2) திரிசொல்

3) திசைச்சொல்

4) வடசொல்

என்பவை ஆகும்.

### 1.4.1 இயற்சொல்

கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைவருக்கும் எளிதில் பொருள் புரியும் வகையில் உள்ள சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.

(எ.கா) மரம், நடந்தான்

மேலே காட்டப்பட்ட சொற்கள் தங்கள் எளிமை இயல்பால் அனைவருக்கும் பொருள் விளங்கும் வகையில் உள்ளன. எனவே இவை இயற்சொற்கள் என்று அழைக்கப்படுகின்றன.

செந்தமிழ் ஆகித் திரியாது யார்க்கும்
  தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்

(நன்னூல் : 271)

செந்தமிழ் நாட்டின் சொற்களில் கற்றவர், கல்லாதவர் என்று எல்லோருக்கும் எளிதில் பொருள் விளங்கும் தன்மை உடையவை இயற்சொல் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

- **இயற்சொல் வகைகள்**

இயற்சொல் இரண்டு வகைப்படும். அவை,

1) பெயர் இயற்சொல்

2) வினை இயற்சொல்

என்பவை ஆகும்.

- **பெயர் இயற்சொல்**

கற்றவர், கல்லாதவர் அனைவருக்கும் எளிதில் பொருள் விளங்கும் வகையில் வரும் பெயர்ச் சொற்களைப் பெயர் இயற்சொற்கள் என்று கூறுகிறோம்.

(எ.கா) மரம், மலை, கடல்

இந்தப் பெயர்ச் சொற்களின் பொருள் அனைவருக்கும் எளிதில் விளங்கும் வகையில் உள்ளன. எனவே இவை பெயர் இயற்சொற்கள் என்று அழைக்கப்படுகின்றன.

- வினை இயற்சொல்

கற்றவர், கல்லாதவர் அனைவருக்கும் எளிதில் பொருள் விளங்கும் வகையில் வரும் வினைச்சொற்களை வினை இயற்சொற்கள் என்று கூறுகிறோம்.

(எ.கா) நடந்தான், சிரித்தாள், வந்தது.

இந்த வினைச் சொற்களின் பொருள் அனைவருக்கும் எளிதில் விளங்கும் வகையில் உள்ளன. எனவே, இவை வினை இயற்சொற்கள் என்று அழைக்கப்படுகின்றன.

### 1.4.2 திரிசொல்

கற்றவர்கள் மட்டும் பொருள் உணர்ந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ள சொற்கள் திரிசொற்கள் எனப்படும்.

(எ.கா) தத்தை, ஆழி, செப்பினான்

மேலே காட்டப்பட்டுள்ள சொற்கள் எளிதில் பொருள் புரிந்து கொள்ள இயலாத வகையில் வந்துள்ளன.

தத்தை - கிளி

ஆழி - கடல்

செப்பினான் - உரைத்தான்

என்று கற்றவர்களால் பொருள் தெரிவிக்கப்பட்டால் மட்டுமே பொருள் விளங்கும் வகையில் உள்ளன. எனவே இவை திரிசொற்கள் என்று அழைக்கப்படுகின்றன.

- திரிசொல் வகைகள்

திரிசொல் இரண்டு வகைப்படும். அவை,

1) ஒரு பொருள் குறித்த பல திரிசொல்

2) பல பொருள் குறித்த ஒரு திரிசொல்

என்பவை ஆகும்.

1. ஒரு பொருள் குறித்த பல திரிசொல்

ஒரே பொருளைத் தரும் பல திரிசொற்கள் தமிழில் உள்ளன. அவை ஒரு பொருள் குறித்த பல திரிசொல் எனப்படும்.

(எ.கா)

கமலம்

கஞ்சம்

முண்டகம்

முளரி

இவை யாவும் தாமரை என்னும் ஒரே பொருளைக் குறிக்கும் பல திரிசொற்கள் ஆகும். இவை யாவும் பெயர்ச்சொற்கள். எனவே ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொற்கள் ஆகும்.

(எ.கா)

செப்பினான்

உரைத்தான்

மொழிந்தான்

இயம்பினான்

இவை யாவும் சொன்னான் என்னும் ஒரே பொருளைக் குறிக்கும் பல திரிசொற்கள் ஆகும். இவை யாவும் வினைச்சொற்கள். எனவே ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொற்கள் ஆகும்.

### 2. பல பொருள் குறித்த ஒரு திரிசொல்

பல பொருளைத் தரும் ஒரு திரிசொல்லும் தமிழில் உள்ளது. அது, பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனப்படும்.

(எ.கா) ஆவி

இச்சொல்லுக்கு உயிர், பேய், மெல்லிய புகை முதலான பல பொருள்கள் உள்ளன. ஆவி என்பது பெயர்ச்சொல். எனவே இதைப் பலபொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல் என்கிறோம்.

(எ.கா) வீசு

இச்சொல்லுக்கு எறி, சிதறு, பரவச்செய், ஆட்டு முதலான பல பொருள்கள் உள்ளன. வீசு என்பது வினைச்சொல். எனவே இதைப் பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல் என்கிறோம்.

ஒரு பொருள் குறித்த பல சொல் ஆகியும்
பல பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும்
அரிது உணர் பொருளன திரிசொல் ஆகும்

(நன்னூல் : 272)

ஒரு பொருளைக் குறிக்கும் பலசொற்களாகவும் பலபொருள்களைக் குறிக்கும் ஒருசொல் ஆகவும் கற்றோர் மட்டுமே பொருளை உணரும் வகையில் வருவன திரிசொல்

ஆகும் என்பது இதன் பொருள்.

### 1.4.3 திசைச்சொல்

தமிழ்நாட்டுக்கு அப்பால் உள்ள பிற பகுதிகளில் பேசப்படும் மொழிகளிலிருந்து வந்து தமிழ்மொழியில் கலந்து வரும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

(எ.கா) ஆசாமி, சாவி

இவற்றில் ஆசாமி என்னும் சொல் உருதுமொழிச் சொல். சாவி என்னும் சொல் போர்த்துக்கீசிய மொழியில் உள்ள சொல். இச்சொற்கள் தமிழ்மொழியில் கலந்து வருகின்றன. இவ்வாறு தமிழ்நாட்டுக்கு நான்கு திசைகளிலும் உள்ள பகுதிகளிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

செந்தமிழ் நிலத்துடன் சேர்ந்த பன்னிரு நாடுகளிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்களும் திசைச் சொற்கள் எனப்படும்.

பெற்றம் – பசு – தென்பாண்டி நாட்டுச்சொல்

தள்ளை – தாய் – குட்ட நாட்டுச்சொல்

அச்சன் – தந்தை – குடநாட்டுச்சொல்

பாழி – சிறுகுளம் – பூழிநாட்டுச்சொல்

இவை போன்றவை செந்தமிழ்நிலத்துடன் சேர்ந்த நாடுகளிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்கள் ஆகும்.

சில திசைச் சொற்களின் பட்டியலையும் அவற்றின் நாடுகளையும் காண்போம்.

திசைச்சொல்

மொழி

தமிழ்

கெட்டி தெலுங்கு உறுதி
தெம்பு தெலுங்கு ஊக்கம்
பண்டிகை தெலுங்கு விழா
வாடகை தெலுங்கு குடிக்கூலி
எச்சரிக்கை தெலுங்கு முன் அறிவிப்பு
அசல் உருது முதல்
அனாமத்து உருது கணக்கில் இல்லாதது
இனாம் உருது நன்கொடை
இலாகா உருது துறை
சலாம் உருது வணக்கம்
சாமான் உருது பொருள்
சவால் உருது அறைகூவல்
கம்மி பாரசீகம் குறைவு

கிஸ்தி பாரசீகம் வரி
குஸ்தி பாரசீகம் குத்துச்சண்டை
சரகம் பாரசீகம் எல்லை
சுமார் பாரசீகம் ஏறக்குறைய
தயார் பாரசீகம் ஆயத்தம்
பட்டா பாரசீகம் உரிமம்
டாக்டர் ஆங்கிலம் மருத்துவர்
நைட் ஆங்கிலம் இரவு
பஸ் ஆங்கிலம் பேருந்து
செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தம் குறிப்பினவே திசைச் சொல் என்ப

(நன்னூல் : 273)

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு பகுதிகளிலிருந்தும் பதினெட்டு மொழி பேசும் நாடுகளில் தமிழ்மொழி பேசும் பகுதி அல்லாத பிற பதினேழு நிலங்களில் உள்ள மொழிகளிலிருந்தும் தமிழ் மொழியில் கலந்து வரும் சொற்கள் திசைச் சொற்கள் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

பன்னிரண்டு நிலங்கள் (நாடுகள்)

1) தென்பாண்டி நாடு
2) குட்ட நாடு
3) குட நாடு
4) கற்கா நாடு
5) வேணாடு
6) பூழி நாடு
7) பன்றி நாடு
8) அருவா நாடு
9) அருவா வடதலை நாடு
10) சீதநாடு
11) மலாடு
12) புனல் நாடு

என்பவை பன்னிரண்டு நாடுகள் ஆகும்.

பதினெட்டு மொழி வழங்கும் நாடுகளில் தமிழ் தவிர்த்து ஏனைய பதினேழு நாடுகள்.

1) சிங்களம்
2) சோனகம்
3) சாவகம்
4) சீனம்
5) துளு
6) குடகம்
7) கொங்கணம்
8) கன்னடம்
9) கொல்லம்

10) தெலுங்கம்
11) கலிங்கம்
12) வங்கம்
13) கங்கம்
14) மகதம்
15) கடாரம்
16) கௌடம்
17) குசலம்

என்பவை பதினேழு மொழிகள் பேசப்படும் நாடுகள் ஆகும்.

### 1.4.4 வடசொல்

வடமொழி என்று குறிப்பிடப்படும் சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ்மொழியில் கலந்து வரும் சொற்கள் வடசொற்கள் எனப்படும். வடசொல் இரண்டு வகைப்படும்.

1) தற்சமம்

2) தற்பவம்

#### 1. தற்சமம்

வடமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் தமிழ்ச் சொற்கள் போன்றே மாற்றமின்றி வருவது தற்சமம் எனப்படும்.

(எ.கா)

கமலம்

காரணம்

மேரு

இச்சொற்களில் வடமொழிக்குரிய சிறப்பு எழுத்து எதுவும் இல்லை. இவற்றில் தமிழ் எழுத்துகளே இடம் பெற்றுள்ளன. எனவே இச்சொற்கள் தற்சமம் என்று அழைக்கப்படுகின்றன.

#### 2. தற்பவம்

வட மொழிக்குரிய சிறப்பு எழுத்துகள் தமிழ்த் தன்மைக்கு ஏற்ப மாறி வருவது தற்பவம் எனப்படும்.

(எ.கா)

பங்கஜம் - பங்கயம்

ரிஷபம் - இடபம்

ஹரி - அரி

பக்ஷி - பட்சி

சரஸ்வதி - சரசுவதி

வருஷம் - வருடம்

இவற்றில் வடமொழிக்கே உரிய ஒலிப்புகளைக் கொண்ட எழுத்துகள் தமிழ் மொழிக்கு ஏற்ப மாறி வந்துள்ளன. எனவே தற்பவம் என்று அழைக்கப்படுகின்றன..

தமிழில் தேவையில்லாத இடங்களில் திசைச்சொற்களையும் வடசொற்களையும் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

பொது எழுத்தானும் சிறப்பு எழுத்தானும்
ஈர் எழுத்தானும் இயைவன வடசொல்

(நன்னூல் : 274)

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவாக உள்ள எழுத்துகளாலும் வடமொழிக்குச் சிறப்பாக உள்ள எழுத்துகளாலும் வடமொழியிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்கள் வடசொற்கள் என்பது இதன் பொருள்.

## 1.5 தொகுப்புரை

தமிழ்மொழியில் உள்ள சொற்களைப் பல வகைகளாகப்

பிரிக்கலாம். அவை,

சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டவை

பகுப்பை அடிப்படையாகக் கொண்டவை

இலக்கண வகைச் சொற்கள்

இலக்கிய வகைச் சொற்கள்

என்பவை ஆகும்

கிளவி, மொழி, பதம் என்னும் சொற்களும் தமிழில் சொல் என்னும் பொருளைத் தரும் சொற்கள் ஆகும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 2

# A02112 திணை, பால், எண், இடம்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

திணை என்றால் ஒழுக்கம் அல்லது இனம் என்னும் கருத்தைத் தெரிவிக்கிறது. திணை, உயர்திணை அஃறிணை என்று இரண்டு வகைப்படும் என்பதை விளக்குகிறது. பால் என்றால் பிரிவு என்பதையும் எண் என்பது பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது என்பதையும் குறிப்பிடுகிறது. பால் ஐந்து வகைப்படும், எண் இரண்டு வகைப்படும் என்பதை விளக்குகிறது. இடம் என்றால் என்ன என்னும் கருத்தையும் இடத்தின் வகைகளையும் விளக்குகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- உயர்திணை, அஃறிணை ஆகியவற்றை உணர்ந்து கொள்ளலாம்.
- ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளலாம்.
- ஒருமை, பன்மை என்னும் பொருள்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளலாம்.
- தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்கள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

2.0 பாடமுன்னுரை
2.1 திணை
2.2 பால்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

2.3 எண்
2.4 இடம்
2.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 2.0 பாட முன்னுரை

சொல்லின் பொது இலக்கணத்தை முந்தைய பாடத்தில் படித்தோம். அந்தச் சொல் வகைகளில் ஒன்றான பெயர்ச்சொல் எல்லாப் பொருள்களையும் குறிக்கிறது. உலகில் உள்ள பொருள்களைத் திணை அடிப்படையிலும், பால் அடிப்படையிலும், எண் அடிப்படையிலும் இடத்தின் அடிப்படையிலும் பல வகைகளாகப் பிரிக்கலாம். அவற்றை இப்பாடத்தில் நாம் பார்ப்போம்.

## 2.1 திணை

திணை என்றால் ஒழுக்கம் அல்லது இனம் என்று பொருள். இங்கே இனம் என்ற பொருளில் திணை என்னும் சொல் இடம்பெறுகிறது. உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் திணையின் அடிப்படையில் பகுக்க முடியும். இந்தத் திணையைத் தமிழ் இலக்கண நூலார் இரண்டு வகையாகப் பகுத்துள்ளனர். அவை வருமாறு:

1) உயர்திணை

2) அஃறிணை

### 2.1.1 உயர்திணை

பகுத்தறிவு கொண்ட மக்களையும் தேவரையும் நரகரையும் குறிப்பது உயர்திணை எனப்படும்.

(எ.கா) அறிவன், முருகன்

இதில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் என்னும் சொல் உலக மக்களைக் குறிக்கும்.

தேவர் என்னும் சொல் கடவுளரைக் குறிக்கும்.

நரகர் என்னும் சொல் நரகத்தில் வாழ்கிறவர்களைக் குறிக்கும் என்று கூறுவார்கள்.

தேவர், நரகர் என்று குறிப்பிடப்படுபவர்கள் இந்த உலகில் வாழவில்லை என்றாலும் மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இவர்களும் உயர்திணை என்றே குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

### 2.1.2 அஃறிணை

மக்கள், தேவர், நரகர் அல்லாத உயிர் உள்ள பொருள்களும் உயிர் இல்லாத பொருள்களும் அஃறிணை எனப்படும்.

(எ.கா) புலி, கல், கடல்

அஃறிணை என்று குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் ஆறு அறிவில் குறைந்தவை ஆகும். இதில் ஊர்வன, பறப்பன, உயிர் இல்லாதவை அனைத்தும் அடங்கும். இவற்றைக் குறிப்பதற்கு உரிய அஃறிணை என்னும் சொல் அல் + திணை என்னும் சொற்களின் சேர்ந்த வடிவம் ஆகும். உயர்ந்த இனம் அல்லாதவை என்பது இதன் பொருள்.

மக்கள், தேவர், நரகர் என்று உயர்திணையில் குறிப்பிடப்பட்டோரில் உயிர் இல்லாத உடலும் (பிணம்) அஃறிணை என்றே குறிக்கப்படும்.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை

**(நன்னூல் : 261)**

மக்களும் தேவரும் நரகரும் உயர்திணை எனப்படுவர். இவர்கள் தவிர ஏனைய உயிர் உள்ள பொருள்களும் உயிர் இல்லாத பொருள்களும் அஃறிணை எனப்படும்.

### 2.1.3 திணைப் பொதுப்பெயர்

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வரும் பெயர் திணைப் பொதுப்பெயர் எனப்படும்.

சாத்தன், கொற்றன், சூரியன், சந்திரன் முதலான பெயர்கள் உயர்திணையிலும் அஃறிணையிலும் உள்ள ஆண்பாலுக்குப் பொதுவாய் வரும்.

சாத்தி, கொற்றி முதலான பெயர்கள் உயர்திணையிலும் அஃறிணையிலும் உள்ள பெண்பாலுக்குப் பொதுவாய் வரும்.

(எ.கா)

அவன் சாத்தன்
அது சாத்தன்
அவள் சாத்தி
அது சாத்தி

தாய், தந்தை என்னும் முறைப்பெயர்களும், தன்மை, முன்னிலை இடப்பெயர்களும், தான், தாம் ஆகிய படர்க்கை இடப்பெயர்களும், மூவிடத்துக்கும் பொதுவான ‘எல்லாம்’ எனும்பெயரும் இருதிணைகளுக்கும் பொதுவாய் வருவன ஆகும்.

தந்தை இவன்
தந்தை இவ் எருது
தாய் இவள்
தாய் இப்பசு

தந்தை, தாய் என்னும் முறைப்பெயர்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வந்துள்ளன.

நான் கோவன்
யான் கோவன்
நான் பூதம்
யான் பூதம்
நாம் மக்கள்
யாம் மக்கள்
நாம் பூதங்கள்
யாம் பூதங்கள்

நான், நாம், யான், யாம் என்னும் தன்மை இடப்பெயர்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வந்துள்ளன.

நீ பாவை
நீ பூதம்
நீர் மக்கள்

நீர் பூதங்கள்
நீவிர் மக்கள்
நீவிர் பூதங்கள்
நீயிர் மக்கள்
நீயிர் பூதங்கள்
எல்லீர் மக்கள்
எல்லீர் பூதங்கள்

நீ, நீர், நீவிர், நீயிர், எல்லீர் என்னும் முன்னிலை இடப்பெயர்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வந்துள்ளன.

அவன் தான்
அது தான்
அவர் தாம்
அவை தாம்
அவர் எல்லாம்
அவை எல்லாம்
நாங்கள் எல்லாம்
நீங்கள் எல்லாம்

தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வந்துள்ளன.

எல்லாம் எனும்பெயர் மூவிடத்துக்கும் பொதுவாய் வந்துள்ளது.

# 2.2 பால்

பால் என்றால் பிரிவு என்று பொருள். உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் திணை அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1) உயர்திணைப் பால்

2) அஃறிணைப் பால்

என்பவை ஆகும்.

## 2.2.1 உயர்திணைப் பால்

உயர்திணைப் பிரிவினரைக் குறிப்பது உயர்திணைப் பால் எனப்படும். உயர்திணைப் பால் மூன்று வகைப்படும். அவை,

1) ஆண் பால்

2) பெண் பால்

3) பலர் பால்

- ஆண்பால்

உயர்திணைப் பொருள்களில் ஆண்களைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.

(எ.கா) வளவன், செழியன்

- பெண்பால்

உயர்திணைப் பொருள்களில் பெண்களைக் குறிப்பது பெண்பால் எனப்படும்.

(எ.கா) யாழினி, மாலினி

- பலர்பால்

உயர்திணையில் உள்ள ஆண், பெண்களில் பலரைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.

(எ.கா) மக்கள், ஆண்கள், பெண்கள்

இந்த எடுத்துக்காட்டுகளில் மக்கள் என்னும் சொல் ஆண், பெண்களில் பலரைக் குறிக்கிறது.

ஆண்கள் என்னும் சொல் ஆண்களில் பலரைக் குறிக்கிறது.

பெண்கள் என்னும் சொல் பெண்களில் பலரைக் குறிக்கிறது.

## 2.2.2 அஃறிணைப் பால்

அஃறிணைப் பொருள்களைக் குறிப்பது அஃறிணைப் பால் எனப்படும். அஃறிணைப் பால் இருவகைப்படும். அவை,

1) ஒன்றன் பால்

2) பலவின் பால்

• ஒன்றன் பால்

அஃறிணைப் பொருள்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால் எனப்படும்.

(எ.கா) கல், மரம்

• பலவின் பால்

அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின் பால் எனப்படும்.

(எ.கா) அவை, வீடுகள், மாடுகள்

உயர்திணைப் பால், அஃறிணைப் பால் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பால்களின் எண்ணிக்கை ஐந்து.

1) ஆண்பால்

2) பெண்பால்

3) பலர்பால்

4) ஒன்றன் பால்

5) பலவின் பால்

என்பவை ஆகும்.

### 2.2.3 மதிப்புப் பன்மை

பெரியோரில் ஒருவரை அவன் என்று கூறுதல் பொருந்தாது என்று கருதி அவர் என்று பலர்பாலில் குறிப்பிடுவது உண்டு. இதை மதிப்புப் பன்மை என்று குறிப்பிடுகிறோம்.

(எ.கா) ஆசிரியர் வந்தார்.

ஓர் ஆசிரியனை, மதிப்புக் கருதி ஆசிரியர் என்று பலர்பாலில் குறிப்பிடுகிறோம்.

பல ஆசிரியரைப் பலர்பாலில் குறிப்பிடுவதற்கு ஆசிரியர்கள் என்று தற்காலத்தில் குறிப்பிடுவதும் உண்டு.

ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை

**(நன்னூல் : 262)**

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்றும் உயர்திணைக்கு உரியவை என்னும் நூற்பாவும்,

ஒன்றே பல என்று இருபாற்று அஃறிணை

(நன்னூல் : 263)

ஒன்றன் பால், பலவின் பால் என்னும் இரண்டும் அஃறிணைக்கு உரியவை என்னும் நூற்பாவும் ஐந்து பால்கள் பற்றிய செய்தியைத் தெரிவிக்கின்றன.

## 2.2.4 பேடியும் அலியும்

ஆண்களில் ஆண் தன்மையை விட்டுப் பெண் தன்மையை விரும்புபவர்களைப் பேடி என்று குறிப்பிடுவார்கள். பெண்களில் பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையை விரும்புவோரை அலி என்று குறிப்பிடுவார்கள். இவ்விரு வகையினரையும் குறிக்கும் பொதுச்சொல் ‘பேடு’ என்பது.

ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்து பேடி என்று குறிப்பிடப்பட்டவர்கள் பெண்பால் என்னும் பிரிவில் அடங்குவர். பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுந்து அலி என்று குறிப்பிடப்பட்டவர்கள் ஆண்பால் என்னும் பிரிவில் அடங்குவர்.

ஆண்பால், பெண்பால் என்னும் இரண்டு பால்களும் உயர்திணைக்கு உரியன. இந்த உயர்திணைப்பாலில் குறிப்பிடாமல் பேடி, அலி ஆகியோரை அஃறிணையாகக் குறிப்பிடுவதும் உண்டு.

இக்காலத்தில் இருவகைப் பேடுகளையும் ‘அலி’ எனும் சொல்லால் குறிக்கின்றனர்.

(எ.டு)

பேடி வந்தாள் (உயர்திணைப் பெண்பால்)

பேடி வந்தது (அஃறிணை ஒன்றன்பால்)

அலி வந்தான் (உயர்திணைப் ஆண்பால்)

அலி வந்தது (அஃறிணை ஒன்றன்பால்)

பெண்மை விட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்
ஆண்மை விட்டு அல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்

(நன்னூல் : 264)

என்னும் நூற்பா, பேடி, அலி ஆகியோருக்கு உரிய பால்களைத் தெரிவிக்கிறது.

## 2.2.5 இருபால் பொதுப்பெயர்

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் பொதுவாய் வரும் பெயர்கள் இருபால் பொதுப்பெயர் எனப்படும்.

வில்லி, பேதை, ஊமை, கவிஞர் முதலான பெயர்கள் இரண்டு பாலுக்கும் பொதுவாய் வரும்.

(எ.கா)

அவன் வில்லி
  அவள் வில்லி

அவன் பேதை
  அவள் பேதை

அவன் ஊமை
  அவள் ஊமை

அவன் கவிஞர்
  அவள் கவிஞர்

### 2.2.6 பால் பகா அஃறிணைப் பெயர்கள்

ஒன்றன் பால், பலவின் பால் என்னும் இரண்டும் அஃறிணைக்கு உரிய பால்கள் என்று முன்பே படித்தோம். சில அஃறிணைப் பெயர்களை ஒன்றன் பாலா, பலவின் பாலா என்று அறிய இயலாது. அவற்றுடன் சேர்ந்துவரும் வினைச்சொல்லைக் கொண்டே அவை ஒன்றன் பாலா, பலவின் பாலா என்று அறிய முடியும்.

பறவை, மரம், பனை முதலியவை பால்பகா அஃறிணைப் பெயர்கள் ஆகும்.

(எ.கா)

பறவை வந்தது
  பறவை வந்தன

மரம் வளர்ந்தது
  மரம் வளர்ந்தன

பனை நின்றது
  பனை நின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட பெயர்களை, ஒருமைக்கும் பன்மைக்கும் ஒன்றாகவே பயன்படுத்துகிறோம்.

ஒருமை – பன்மை

பறவை – பறவை

மரம் – மரம்

பனை – பனை

தற்காலத்தில் பேசும்போதும் எழுதும்போதும் மேலே காணும் பெயர்களைப் பன்மையில் குறிப்பிடும்போது பன்மைக்குரிய ‘கள்’ விகுதி சேர்த்துப் பயன்படுத்துவதும் உண்டு.

ஒருமை – பன்மை

பறவை – பறவைகள்

மரம் – மரங்கள்

பனை – பனைகள்

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.3 எண்

பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். எண் இரண்டு வகைப்படும். அவை,

1) ஒருமை

2) பன்மை

### 2.3.1 ஒருமை

ஏதேனும் ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும். பொருள்களைக் குறிக்கும் பிரிவுகளில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் மூன்றும் ஒருமைக்குரிய பால்கள் ஆகும்.

முருகன், வளவன், அவன் – ஆண்பால்
வள்ளி, குழலி, அவள் – பெண்பால்
மாடு, கல், அது – ஒன்றன்பால்

### 2.3.2 பன்மை

பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும். பொருள்களைக் குறிக்கும் பிரிவுகளில் பலர் பால், பலவின் பால் என்னும் இரண்டும் பன்மைக்குரிய பால்கள் ஆகும்.

அவர்கள், ஆண்கள், பெண்கள் – பலர்பால்
அவை, மாடுகள் – பலவின்பால்

## 2.4 இடம்

நாம் உரையாடும்போது பேசுகின்ற நாமும் கேட்கின்றவர்களும் பேசப்படும் பொருளும் என்று மூன்று நிலைகள் உள்ளன. இதையே இடம் என்று குறிப்பிடுவர்.

இடம் மூன்று வகைப்படும். எனவே இதை மூவிடம் என்றும் கூறுவார்கள்.

1) தன்மை

2) முன்னிலை

3) படர்க்கை

### 2.4.1 தன்மை

பேசுபவர் தன்னைக் குறிப்பது தன்மை எனப்படும். இது இரண்டு வகைப்படும்.

1) தன்மை ஒருமை

2) தன்மைப் பன்மை

- தன்மை ஒருமை

தன்மை இடத்தில் ஒருவரைக் குறிப்பது தன்மை ஒருமை எனப்படும்.

(எ.கா)

நான் பேசினேன்
யான் பேசினேன்

- தன்மைப் பன்மை

தன்மை இடத்தில் பலரைக் குறிப்பது தன்மைப் பன்மை எனப்படும்.

(எ.கா)

நாம் படித்தோம்
யாம் படித்தோம்

### 2.4.2 முன்னிலை

முன்னால் இருப்பவரைக் குறிப்பது முன்னிலை எனப்படும். இது இரண்டு வகைப்படும்.

1) முன்னிலை ஒருமை
2) முன்னிலைப் பன்மை

- முன்னிலை ஒருமை

முன்னிலை இடத்தில் ஒருவரைக் குறிப்பது முன்னிலை ஒருமை எனப்படும்.

(எ.கா) நீ வந்தாய்

● முன்னிலைப் பன்மை

முன்னிலை இடத்தில் பலரைக் குறிப்பது முன்னிலைப் பன்மை எனப்படும்.

(எ.கா)

நீர் வந்தீர்
நீவிர் வந்தீர்
நீங்கள் வந்தீர்கள்

### 2.4.3 படர்க்கை

தன்மையும் முன்னிலையும் அல்லாத பிறர் அல்லது பிற பொருளைக் குறிப்பது படர்க்கை எனப்படும். இது இரு வகைப்படும்.

1) படர்க்கை ஒருமை
2) படர்க்கைப் பன்மை

● படர்க்கை ஒருமை

படர்க்கையில் ஒருவர் அல்லது ஒரு பொருளைக் குறிப்பது படர்க்கை ஒருமை எனப்படும்.

(எ.கா)

அவன் வந்தான்
அவள் வந்தாள்
அது வந்தது

● படர்க்கைப் பன்மை

படர்க்கையில் பலர் அல்லது பல பொருளைக் குறிப்பது படர்க்கைப் பன்மை எனப்படும்.

(எ.கா)

அவர் வந்தார்
அவை வந்தன.

தன்மை, முன்னிலை ஆகியவற்றைக் குறிக்கும் இடப்பெயர்களில் ஆண்பால், பெண்பால் என்னும் பிரிவுகள் தெரிவதில்லை. ஆனால் படர்க்கைச் சொல்லில் மட்டும் ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் என்னும் பிரிவுகள் தெரியும்.

தன்மை, முன்னிலை, படர்க்கை மூ இடனே

**(நன்னூல் : 266)**

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவை மூன்று இடங்கள் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

## 2.4.4 மூவிடப் பொதுப்பெயர்

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களுக்கும் பொதுவாய் வரும் பெயர் மூவிடப் பொதுப்பெயர் எனப்படும்.

எல்லாம் என்னும் பெயர் மூன்று இடங்களுக்கும் பொதுவாய் வரும்.

யாம் எல்லாம்

நீவிர் எல்லாம்

அவர் எல்லாம்

அவை எல்லாம்

‘எல்லாம்’ என்னும் பெயர் பன்மைக்கு உரியது.

## 2.5 தொகுப்புரை

உயர்திணை அஃறிணை என்னும் இரு திணைப் பெயர்கள் உள்ளன. இந்தத் திணைப் பெயர்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பிரிவுகளைக் கொண்டுள்ளன. இவற்றில் ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகியவை உயர்திணைக்கு உரியன. ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவை அஃறிணைக்கு உரியன.

பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். ஒருமை, பன்மை என்று எண் இருவகைப்படும். மதிப்புக் கருதி ஒருவரைப் பன்மையில் குறிப்பிடுவதும் உண்டு. இதை மதிப்புப் பன்மை என்பர். ஒருவர் தம் முன்னால் இருப்பவரிடம் பேசும்போது பேசுகிறவர் தன்மை இடமாகவும் முன்னால் இருப்பவர் முன்னிலை இடமாகவும் குறிக்கப்படுவர். தன்மை, முன்னிலை அல்லாத இடம் படர்க்கை எனப்படும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 3

# A02113 பெயர்ச்சொல்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

பெயர்ச்சொல்லின் பொது இலக்கணத்தைத் தெரிவிக்கிறது. ஆறுவகைப் பெயர்களையும் விளக்குகிறது. வினையாலணையும் பெயர் என்றால் என்ன என்பதை உணர்த்துகிறது. ஆகுபெயர் என்றால் என்ன என்பதையும் அதன் வகைகளையும் விளக்குகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- பெயர்ச்சொல்லின் இலக்கணத்தை அறிந்து கொள்ளலாம்.
- பொருட்பெயர் முதலான ஆறுவகைப் பெயர்களையும் தெரிந்து கொள்ளலாம்.
- வினையாலணையும் பெயர் பற்றிய விளக்கத்தை அறியலாம்.
- ஆகுபெயரின் இலக்கணத்தை அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

3.0 பாட முன்னுரை
3.1 பெயர்ச்சொல்
3.2 பெயர்ச் சொல் வகைகள்
3.3 வினையாலணையும் பெயர்
தன் மதிப்பீடு : வினாக்கள்
3.4 ஆகுபெயர்
3.5 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 3.0 பாட முன்னுரை

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பெயர் இருக்கிறது. மனிதர் என்னும் சொல்லே நம்மைக் குறிக்கும் பெயராகத்தான் இருக்கிறது. மனிதர்களை உயர்திணையாக நாம் முந்தைய பாடத்தில் பார்த்தோம். அஃறிணையில் குறிக்கப்படும் உயிர் உள்ள பொருள்களுக்கும் உயிர் இல்லாத பொருள்களுக்கும் பெயர்கள் இருக்கின்றன. இவ்வாறு எல்லாப் பொருள்களையும் குறிப்பிடப் பயன்படும் பெயர்களைப் பற்றிய இலக்கணத்தை இந்தப் பாடத்தில் நாம் காண்போம்.

# 3.1 பெயர்ச்சொல்

ஐம்பொறிகளாலும் உள்ளத்தாலும் உணரும் பொருள்களைக் குறிப்பவை பெயர்ச்சொல் என்று இந்தத் தொகுதியின் முதல் பாடத்தில் படித்தோம். இந்தப் பெயர்ச்சொல்லுக்கு உரிய இலக்கணத்தை இலக்கண நூலோர் குறிப்பிட்டுள்ளனர்.

பெயர்ச்சொல் இடுகுறிப்பெயராய் வரும்.
காரணப்பெயராய் வரும்.
காலம் காட்டாது.
எட்டு வேற்றுமைகளையும் ஏற்கும்.
உயர்திணையாகவும் அஃறிணையாகவும் வரும்.
ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐந்து பால்களிலும் வரும.

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.

*இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்*
*தொடர்ந்து தொழில் அல காலம் தோற்றா*
*வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று*
*ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே*

*(நன்னூல் : 275)*

என்னும் நன்னூல் நூற்பா இதனை விளக்குகிறது.

## 3.1.1 இடுகுறிப்பெயர்

காரணம் எதுவும் இல்லாமல் இதற்குப் பெயர் இது என்று இட்டு வழங்கப்படுவது இடுகுறிப் பெயர் எனப்படும்.

(எ.கா.) மரம், நிலம்.

## 3.1.2 காரணப் பெயர்

ஏதேனும் காரணம் கருதி ஒரு பொருளுக்கு வழங்கப்படும் பெயர் காரணப் பெயர் எனப்படும்.

(எ.கா.) அணி, பறவை

அணியப்படுவதால் அணிகலன்களை அணி என்றும் பறப்பதால் பறவை என்றும் குறிப்பிடுகிறோம்.

## 3.2 பெயர்ச்சொல் வகைகள்

பெயர்ச்சொல்லை ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவை,

1) பொருட்பெயர்

2) இடப்பெயர்

3) காலப்பெயர்

4) சினைப்பெயர்

5) பண்புப்பெயர்

6) தொழிற்பெயர்

என்பவை ஆகும்.

### 3.2.1 பொருட்பெயர்

உயிர் உள்ள, உயிர் இல்லாத பொருள்களின் பெயர்களைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும்.

(எ.கா) அமுதன், வள்ளி, பொன், கிளி

மேலே பார்த்த எடுத்துக்காட்டுகளில் உயிர்திணைப் பொருள்களும் உள்ளன. அஃறிணைப் பொருள்களும் உள்ளன. எனவே, உயர்திணைப் பொருள்கள், அஃறிணைப் பொருள்கள் ஆகிய அனைத்துப் பொருள்களும் பொருட்பெயர் என்று கொள்ளலாம்.

### 3.2.2 இடப்பெயர்

ஏதேனும் ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா) சென்னை, கதிர்காமம், மேடு, பள்ளம்

ஊர்களின் பெயர்களும் ஊரில் உள்ள நிலப்பிரிவுகளின் பெயர்களும் இடப்பெயர்கள் ஆகும்.

### 3.2.3 காலப்பெயர்

ஏதேனும் ஒரு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா) திங்கள் கிழமை, தை, காலை, மாலை

பொழுதுகளின் பெயர்களும் நாள்களின் பெயர்களும் திங்களின் பெயர்களும் ஆண்டின் பெயர்களும் காலப்பெயர்கள் ஆகும்.

பொழுது – காலை

நாள் – செவ்வாய்க்கிழமை

திங்கள் – ஆனித்திங்கள்

ஆண்டு – திருவள்ளுவர் ஆண்டு

### 3.2.4 சினைப்பெயர்

பொருள்களின் உறுப்புகளைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும். சினை என்றால் உறுப்பு என்று பொருள். உயர்திணைப் பொருள்களின் உறுப்புகளையும் அஃறிணைப் பொருள்களின் உறுப்புகளையும் இது குறிக்கும்.

(எ.கா) கை, கண், கிளை, இலை

### 3.2.5 பண்புப்பெயர்

ஒரு பொருளின் பண்பை உணர்த்தும் பெயர் பண்புப்பெயர் எனப்படும். நிறம், சுவை, வடிவம், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பண்புப் பெயர் வரும்.
பாலின் நிறம் வெண்மை
தேனின் சுவை இனிமை
நிலவின் வடிவம் வட்டம்
ஒன்றைக் குறிப்பது ஒருமை

### 3.2.6 தொழிற்பெயர்

ஏதேனும் ஒரு தொழிலை உணர்த்தும் (தொழிலின் பெயராக வரும்) பெயர் தொழிற்பெயர் எனப்படும். தொழிற்பெயர் அல், தல் முதலிய விகுதிகளைப் பெற்று வரும்.

(எ.கா)

ஆடல், நாடல் – அல் விகுதி
ஆடுதல், நாடுதல் – தல் விகுதி

இந்த எடுத்துக்காட்டுகளில் முதலில் உள்ள ஆடல், நாடல் ஆகியவை அல் என்னும் விகுதியைப் பெற்றுள்ளன; ஆடுதல், நாடுதல் ஆகியவை தல் என்னும் விகுதியைப் பெற்றுள்ளன.

இவ்விகுதிகள் இல்லாமலும் தொழிற்பெயர் வருவதுண்டு. அத்தகைய தொழிற்பெயர் இரண்டு வகைப்படும். அவை:

1. முதனிலைத் தொழிற்பெயர்
2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

- **முதனிலைத் தொழிற்பெயர்**

தொழிற்பெயர் தனக்குரிய விகுதியைப் பெறாமல் பகுதி (முதனிலை) மட்டும் வந்து தொழிலை உணர்த்துவது முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா)

சோறு கொதி வந்தது.
மின்னி இடி இடித்தது.

இவை கொதித்தல், இடித்தல் என்று வராமல் கொதி, இடி என்று பகுதி மட்டும் வந்துள்ளன. எனவே இவை முதனிலைத் தொழிற்பெயர்கள் என்று அழைக்கப்படுகின்றன.

- முதனிலை திரிந்த தொழிற்பெயர்

தொழிற்பெயரின் விகுதியைப் பெறாத முதனிலை, திரிந்து (மாறுபட்டு) வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா)

கெடுவான் கேடு நினைப்பான்.
காந்தியடிகள் துப்பாக்கிச் சூடுபட்டு இறந்தார்.

இந்த எடுத்துக்காட்டுகளில் கெடு என்னும் முதனிலை கேடு என்றும் சுடு என்னும் முதனிலை சூடு என்றும் மாறி வந்துள்ளன. எனவே இவை முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## 3.3 வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்று, வினையை உணர்த்தாமல் பெயர்த் தன்மை பெற்று வந்தாலும் பெயர்த்தன்மை பெற்று வேற்றுமை உருபை ஏற்று வந்தாலும் வினையாலணையும் பெயர் எனப்படும்.

(எ.கா)

பாடியவன் பாராட்டுப் பெற்றான்.
பாடியவனுக்குப் பரிசு கிடைத்தது.

இதில் முதல் எடுத்துக்காட்டில் உள்ள வினைமுற்று, பெயர்த்தன்மை பெற்று வந்துள்ளது. இரண்டாவது எடுத்துக்காட்டு பெயர்த்தன்மை பெற்று வேற்றுமை உருபை ஏற்று வந்துள்ளது.

வினையாலணையும் பெயர் மூன்று வகைப்படும். அவை,

1) தன்மை வினையாலணையும் பெயர்
2) முன்னிலை வினையாலணையும் பெயர்
3) படர்க்கை வினையாலணையும் பெயர்

என்பவை ஆகும்.

### 3.3.1 தன்மை வினையாலணையும் பெயர்

தன்மை வினைமுற்று, பெயர்த் தன்மை பெற்று வந்தால் தன்மை வினையாலணையும் பெயர் எனப்படும்.

(எ.கா)

எடுத்தேனைப் பார்த்தாயா.
எடுத்தேமைப் பார்த்தாயா.

இதில் முதலில் உள்ள எடுத்துக்காட்டு ஒருமையையும், இரண்டாவது எடுத்துக்காட்டு பன்மையையும் குறிக்கிறது.

### 3.3.2 முன்னிலை வினையாலணையும் பெயர்

முன்னிலை வினைமுற்று, பெயர்த் தன்மை பெற்று வந்தால் முன்னிலை வினையாலணையும் பெயர் எனப்படும்.

(எ.கா)

சென்றாயைக் கண்டேன்.
சென்றீரைக் கண்டேன்

இதிலும் முதலில் உள்ள எடுத்துக்காட்டு ஒருமையையும், இரண்டாவது எடுத்துக்காட்டு பன்மையையும் குறிக்கிறது.

### 3.3.3 படர்க்கை வினையாலணையும் பெயர்

படர்க்கை வினைமுற்று, பெயர்த் தன்மை பெற்று வந்தால் படர்க்கை வினையாலணையும் பெயர் எனப்படும்.

(எ.கா) படித்தவனுக்குப் பரிசு கிடைத்தது.

தன்மை வினையாலணையும் பெயர், முன்னிலை வினையாலணையும் பெயர், படர்க்கை வினையாலணையும் பெயர் ஆகிய மூன்றும் உடன்பாட்டுப் பொருளில் வந்துள்ளன.

- வினையாலணையும் பெயர் எதிர்மறைப் பொருளில் வருவதும் உண்டு.

(எ.கா) பாடாதவர் பரிசு பெறமுடியாது.

இதில் பாடாதவர் என்பது எதிர்மறைப் பொருளை உணர்த்துகிறது.

### 3.3.4 தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள்

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| 1. தொழிலை மட்டும் உணர்த்தும். | 1. தொழிலையும் தொழில் செய்த பொருளையும் உணர்த்தும். |
| 2. படர்க்கை இடத்தில் மட்டும் வரும் | 2. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும். |
| 3.காலம் காட்டாது. | 3. காலம் காட்டும். |

வினையின் பெயரே படர்க்கை; வினையால்
அணையும் பெயரே யாண்டு மாகும்.

(நன்னூல் : **286**)

தொழிற்பெயர், படர்க்கை இடத்தில் மட்டும் வரும். வினையாலணையும் பெயர் மூவிடத்திலும் வரும் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.4 ஆகுபெயர்

ஒன்றன் பெயர் தனக்குரிய பொருளை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

(எ.கா)

உலகம் சிரித்தது.
என் பள்ளி வென்றது.

இவற்றில் உலகம், பள்ளி என்னும் இடப்பெயர்கள் இடத்தை உணர்த்தாமல் முறையே உலகில் உள்ள மக்களையும் பள்ளியில் உள்ள மாணவர்களையும் உணர்த்துகின்றன. எனவே இவை ஆகுபெயர் எனப்பட்டன.

ஆகுபெயரை எண்ணிக்கை அடிப்படையில் பலவாகக் கூறலாம். அவற்றை இங்கே காண்போம்:

1) பொருளாகு பெயர்
2) இடவாகு பெயர்
3) காலவாகு பெயர்
4) சினையாகு பெயர்
5) பண்பாகு பெயர்
6) தொழிலாகு பெயர்
7) அளவையாகு பெயர்
8) சொல்லாகு பெயர்
9) தானியாகு பெயர்
10) கருவியாகு பெயர்
11) காரியவாகு பெயர்
12) கருத்தாவாகு பெயர்
13) உவமையாகு பெயர்

### 3.4.1 பொருள் முதல் ஆறு ஆகுபெயர்கள்

பொருள்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப் பெயர், தொழில்பெயர் என்னும் அறுவகைப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு வரும் ஆகுபெயர்களைப் பொருள் முதல் ஆறு ஆகுபெயர்கள் என்பர்.

- **பொருளாகு பெயர்**

முதற்பொருளின் பெயர் அதன் சினைப் பொருளுக்கு ஆகி வருவது பொருளாகு பெயர் எனப்படும். இது முதலாகு பெயர் என்றும் வழங்கப்பெறும்.

(எ.கா) முல்லை மணம் வீசியது.

இதில் முல்லை என்பது முல்லைக் கொடியின் பெயர். இங்கே மணம் வீசியது என்னும் குறிப்பால் இது சினைப் பொருளாகிய முல்லைப் பூவுக்கு ஆகி வந்துள்ளது.

- **இடவாகு பெயர்**

ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) ஊர் சிரித்தது.

இதில் ஊர் என்னும் இடப்பெயர் சிரித்தது என்னும் குறிப்பால் ஊரில் உள்ள மக்களுக்கு ஆகி வந்துள்ளது.

- காலவாகு பெயர்

ஒரு காலத்தின் பெயர் அந்தக் காலத்தோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) கார் அறுவடை ஆயிற்று.

இதில் கார் என்பது காலப்பெயர். இங்கே அறுவடை ஆயிற்று என்னும் குறிப்பால் இது கார்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்துள்ளது.

- சினையாகு பெயர்

ஒரு சினைப் பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) தலைக்குப் பத்து ரூபாய் கொடு.

இதில் தலை என்னும் சினைப் பொருளின் பெயர், பத்து ரூபாய் கொடு என்னும் குறிப்பால் அந்தத் தலையை உடைய மனிதனுக்கு ஆகி வந்துள்ளது.

முதலாகு பெயர்

சினையாகு பெயர்

முதற்பெயர் சினைப் பொருளுக்கு ஆகி வரும். சினைப்பெயர் முதற்பொருளுக்கு ஆகி வரும்.

- பண்பாகு பெயர்

ஒரு பண்பின் பெயர் அப்பண்புடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இது குணவாகு பெயர் என்றும் வழங்கப்பெறும்.

(எ.கா) இனிப்பு உண்டான்.

இதில் இனிப்பு என்னும் சுவைப் பண்பின் பெயர் அச்சுவை கொண்ட பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

- தொழிலாகு பெயர்

ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

(எ.கா) சுண்டல் உண்டான்.

இதில் சுண்டல் என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

### 3.4.2 அளவை ஆகு பெயர்கள்

எண்ணல் எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய அளவைப் பெயர்கள் ஆகுபெயர்களாக வரும்.

- எண்ணல் அளவையாகு பெயர்

ஓர் எண்ணல் அளவையின் பெயர் அந்த எண்ணிக்கையில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) ஒன்று பெற்றால் ஒளி மயம்.

இதில் ஒன்று என்னும் எண்ணல் அளவைப் பெயர் அந்த எண்ணுள்ள பொருளுக்கு (குழந்தைக்கு) ஆகி வந்திருப்பதால் எண்ணல் அளவையாகு பெயர் எனப்பட்டது.

- எடுத்தல் அளவையாகு பெயர்

ஓர் எடுத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) மூன்று கிலோ வாங்கி வா.

இதில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

- முகத்தல் அளவையாகு பெயர்

ஒரு முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) ஐந்து லிட்டர் வாங்கி வா.

இதில் லிட்டர் என்னும் முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

- நீட்டல் அளவையாகு பெயர்

ஒரு நீட்டல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) இரண்டு மீட்டர் கொடுங்கள்.

இதில் மீட்டர் என்னும் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

### 3.4.3 சொல்லாகு பெயர்

சொல்லைக் குறிக்கும் பெயர் சொல்லுடைய பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயர் எனப்படும்.

(எ.கா) இந்த உரை எனக்கு மனப்பாடம்.

இதில் உரை என்னும் சொல், அச்சொல்லின் பொருள் அமைந்த நூலுக்கு ஆகி வந்துள்ளது.

### 3.4.4 தானியாகு பெயர்

ஓர் இடத்தில் உள்ள பொருளின் பெயர் (தானி) அது சார்ந்திருக்கும் இடத்திற்கு (தானத்திற்கு) ஆகி வருவது தானியாகு பெயர் எனப்படும்.

(எ.கா) அடுப்பிலிருந்து பாலை இறக்கு.

இதில் பால் என்பது அது சார்ந்திருக்கும் பாத்திரத்தைக் குறிக்கிறது. பாலை இறக்கு என்றால் பால் இருக்கும் பாத்திரத்தை இறக்கு என்றே பொருள் கொள்ளப்படுகிறது.

### 3.4.5 கருவியாகு பெயர்

ஒரு கருவியின் பெயர் அக்கருவியால் ஆகும் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.

(எ.கா) நான் குறள் படித்தேன்.

இதில் குறள் என்பது குறள் வெண்பாவைக் குறிக்கும் சொல். ஆனால் இங்கே குறள் வெண்பாவால் ஆக்கப்பட்ட பாக்களைக் குறிக்கிறது.

### 3.4.6 காரியவாகு பெயர்

ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு (கருவிக்கு) ஆகி வந்தால் காரியவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) நான் அலங்காரம் கற்றேன்.

இதில் அலங்காரம் என்னும் சொல் அலங்காரத்தைக் (அணியை) கற்பிக்கும் நூலுக்கு ஆகி வந்துள்ளது.

### 3.4.7 கருத்தாவாகு பெயர்

ஒரு கருத்தாவின் பெயர் அக்கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) இவருக்கு வள்ளுவர் மனப்பாடம்.

இதில் வள்ளுவர் என்னும் சொல் வள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் நூலுக்கு ஆகி வந்துள்ளது.

### 3.4.8 உவமையாகு பெயர்

ஓர் உவமையின் பெயர் அதனால் உணர்த்தப் பெறும் உவமேயத்திற்கு ஆகி வருவது உவமையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) காளை வந்தான்.

இதில் காளை என்னும் சொல், காளை போன்ற வீரனுக்கு ஆகி வந்துள்ளது.

காளை – உவமை
வீரன் – பொருள்

பொருள் முதல் ஆறோடு அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதைத்
தொல்முறை உரைப்பன ஆகுபெயரே

*(நன்னூல் : 290)*

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என்னும் அறுவகைப் பெயரை அடிப்படையாகக் கொண்டவையும், எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலான அளவைப் பெயர்களும், சொல், தானி, கருவி, காரியம், கருத்தா முதலானவையும் தம்மோடு தொடர்புடைய வேறு பொருளுக்குப் பெயராகிப் பழங்காலம் முதல் சொல்லப்பட்டு வருவன ஆகுபெயர் என்பது இதன் பொருள்.

## 3.5 தொகுப்புரை

பெயர்ச்சொல் என்னும் இந்தப் பாடத்தில் பெயர்ச்சொல்லின் பொது இலக்கணத்தையும் அறுவகைப் பெயர்களையும் படித்தோம். வினையாலணையும் பெயரையும் அதன் வகைகளையும், தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளையும் பார்த்தோம். ஆகுபெயர் என்றால் என்ன என்பது பற்றியும் ஆகுபெயர்களின் வகைகள் பற்றியும் அறிந்தோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாட ஆசிரியரைப் பற்றி



முனைவர் சொக்கலிங்கம்

# பாடம் - 4

# A02114 பொதுப்பெயர்கள்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

பொதுப் பெயர்கள் பற்றிய விளக்கத்தைக் கூறுகிறது. பால்பகா அஃறிணைப் பெயர்கள், பொதுப்பெயர்கள் இவற்றைத் தெரிவிக்கிறது. இருதிணைப் பொதுப்பெயர்கள் பால் பொதுப் பெயர்களாக வரும் இயல்பினை உணர்த்துகிறது. பொதுப் பெயர்களின் வகைகளாக வருவனவற்றை எடுத்துக் கூறுகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளுக்கும் பொதுவாக வரும் பொதுப் பெயர்களைப் பற்றி விளங்கிக் கொள்ளலாம்.
- பால்பகா அஃறிணைப் பெயர்கள், ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுப் பெயராய் வரும் இயல்பினை எடுத்துக் காட்டுவதை அறியலாம்.
- பொதுப்பெயர்களின் வகைகளைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் இந்தப் பாடம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை

4.1 பால்பகா அஃறிணைப் பெயர்கள்

4.2 இருதிணைப் பொதுப்பெயர்கள்

தன் மதிப்பீடு வினாக்கள் – I

4.3 இடப்பெயர்கள் எண் உணர்த்தல்

4.4 எண்ணால் வரும் உயர்திணைப் பெயர்கள்

4.5 தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும்

4.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 4.0 பாட முன்னுரை

முன் பாடத்தில் பெயர்ச் சொல்லின் இலக்கணம் பற்றியும் அதன் வகைகள் பற்றியும் அறிந்தோம். இனி, அதன் தொடர்ச்சியாக இருதிணைகளிலும் வரும் பொதுப் பெயர்கள் பற்றி, இந்தப் பாடத்தில் தெரிந்து கொள்ளலாம்.

அஃறிணைப் பெயர்களுள் ஒருமை என்றும் பன்மை என்றும் பால் பகுக்கப்படாத பெயர்கள் உள்ளன. இவை அஃறிணை ஒன்றன்பாலுக்கும் அஃறிணைப் பலவின் பாலுக்கும் பொதுப்பெயர்களாக வருவதை இங்கு அறியலாம்.

உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணைக்கும் உரிய பொதுப் பெயர்கள் இருபத்து ஆறு ஆகும். இப்பெயர்கள் ஒவ்வொன்றும் உயர்திணையிலும் அஃறிணையிலும் தன் தன் பால்களை ஏற்று வரும்.

ஆண்மைப் பொதுப் பெயர், உயர்திணை ஆண்பாலையும், அஃறிணை ஆண்பாலையும் ஏற்கும். பெண்மைப் பொதுப் பெயர், உயர்திணைப் பெண்பாலையும், அஃறிணைப் பெண்பாலையும் ஏற்கும். ஒருமைப் பொதுப் பெயர், உயர்திணை ஒருமையையும் அஃறிணை ஒருமையையும் ஏற்கும். பன்மைப் பொதுப் பெயர், உயர்திணைப் பன்மையையும், அஃறிணைப் பன்மையையும் ஏற்கும்.

இவை பற்றிய விரிவான விளக்கத்தை இனிக் காணலாம்.

## 4.1 பால்பகா அஃறிணைப் பெயர்கள்

ஒன்றன் பாலா அல்லது பலவின் பாலா என்று பகுக்கப்படாத அஃறிணைப் பெயர்ச் சொற்கள், அத்திணையில் இருபால்களுக்கும் பொதுவாகிய பெயர்கள் ஆகும்.

(பகா = பகுக்கப்படாத)

ஒன்றன்பாலும் பலவின்பாலும் அஃறிணைக்கு உரியன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தனித்த ஒரு பொருளைச் சுட்டினால் அது ஒன்றன்பால் ஆகும்.

எடுத்துக்காட்டு:

அது மாடு, இது பறவை, இது மரம்

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைச் சுட்டினால் அது பலவின் பால் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

அவை மாடு, இவை பறவை, இவை மரம்

உயர்திணைப் பெயர்களைப் போல அஃறிணைப் பெயர்களுக்குப் பெரும்பாலும் அவற்றின் பால்களைச் சுட்டும் ஈற்று எழுத்துகள் இல்லை. அதனால், அவை ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாகவே வரும். அவற்றை, பால்பகா அஃறிணைப் பெயர்கள் என்பர்.

எடுத்துக்காட்டாக,

‘கல்வி கரை இல, கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல’
என்ற இச்செய்யுளில் கல்வி, நாள், பிணி என்னும் சொற்கள் ஒன்றன் பாலாக இருக்கின்றன. இவை முறையே இல, சில, பல என்னும் பன்மைப் பயனிலையைக் கொண்டு முடிந்துள்ளன. இவை வழுவோ (குற்றமோ) என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இவை வழுவல்ல.

அஃறிணைப் பெயர்களில் அது, பெரியது என்பன போல இறுதி எழுத்து ஒன்றன் பாலைக் குறிக்கவும். அவை, பெரியவை என்பன போல இறுதி எழுத்துப் பலவின்பாலைக் குறிக்கவும் அமைந்தது போல, கல்வி, நாள், பிணி என்னும் சொற்களில் அமையவில்லை. ஆகவே, இவற்றைப் பால்பகா அஃறிணைப் பெயர்கள் என்று கூறுவர்.

மாடு, காடு, மரம், செடி, கடல், மலை, பறவை போன்றன எல்லாம் பால்பகா அஃறிணைப் பெயர்களே ஆகும்.

மாடு, காடு, மரம், செடி, கடல், மலை, பறவை போன்ற இப்பெயர்கள் ஒருமையா, பன்மையா என்பதை முடிக்கும் சொல்லே (பயனிலையே) வரையறுக்கும்.

எடுத்துக்காட்டாக,

மாடு வந்தது – என்பதில் மாடு – ஒருமை

மாடு வந்தன – என்பதில் மாடு – பன்மை

மாடு அது – என்பதில் மாடு – ஒருமை

மாடு அவை – என்பதில் மாடு – பன்மை

இங்கு முடிக்கும் வினையாலும், பெயராலும் மாடு தன் பாலை உணர்த்திற்று. முடிக்கும் சொல் இல்லையென்றால் 'கள்' என்ற விகுதி (இறுதி நிலை) சேர்த்துப் பன்மைப் பொருளைப் பெற வைப்பர்.

எடுத்துக்காட்டு:

மாடுகள், பறவைகள் கள் விகுதியால் பன்மை

ஆயின.
பாம்புகள், மரங்கள்

மாடு வந்தன, பறவை பறந்தன சேரும் வினையால்

பன்மை ஆயின.
பாம்பு ஊர்ந்தன, மரம் வளர்ந்தன

(வந்தன, பறந்தன, ஊர்ந்தன, வளர்ந்தன என்பவை வினைச் சொற்கள் ஆகும்.)

மாடு அவை, பறவை அவை சேரும் பெயரால்

பன்மை ஆயின.
பாம்பு அவை, மரம் அவை

இத்தகைய வினையும் பெயரும் பயனிலையாக அல்லாமல், அஃறிணைப் பெயருக்கு முன்னும் வந்து ஒருமை பன்மையினை உணர்த்தும்.

வந்தன மாடு,

பறந்தன பறவை என, வினைச்சொல் அஃறிணைப்

ஊர்ந்தன பாம்பு,

வளர்ந்தன மரம் பெயருக்கு முன்வந்து பன்மையைக் காட்டின.

அவை மாடு,

அவை பறவை

இங்கு, பெயர்ச்சொல் அஃறிணைப்

பெயருக்கு முன்வந்து

பன்மையைக் காட்டின.

அவை பாம்பு,
அவை மரம்

இவற்றைக் கொண்டு,

ஒன்றன்பால் விகுதி – து
பலவின்பால் விகுதி – அ, வை, கள்
என அறியலாம்.

உலக வழக்கில் சில சொற்களும் ஒன்றன் பால் விகுதியையோ (து – என்பது ஒன்றன்பால் விகுதி), பலவின்பால் விகுதியையோ (அ, வை, கள்) பெறாமல் இரண்டிற்கும் பொதுவாய் நின்று ஒருமை அடையாலும், பன்மை அடையாலும் ஒன்றன் பாலினையோ, பலவின் பாலினையோ உணர்த்தி நிற்கும்.

எடுத்துக்காட்டு

1) ஒரு காய் என்ன விலை? – ஒருமை (ஒரு என்னும் அடை ஒருமையைச் சுட்டியது)
2) நூறு காய் என்ன விலை? – பன்மை (நூறு என்னும் அடை பன்மையைச் சுட்டியது)
3) ஒருமொழி பயின்றவன் – ஒருமை (ஒரு என்னும் அடைஒருமையைச் சுட்டியது.)
4) பல மொழி பயின்றவன் – பன்மை (பல என்னும் அடைபன்மையைச் சுட்டியது.)

மேலும் சில எடுத்துக்காட்டுகள்:

ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்
நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத் தீரும்
பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்

இப்பழமொழிகளில் ஒருமை, பன்மை ஆகியன அடையால் உணர்த்தப்படுகின்றன. ஆயிரம், ஒரு, நூறு, ஆறு, பல என்ற அடைகள் முறையே காக்கை, கல், நாள், மரம் என்பனவற்றின் ஒருமை, பன்மையை உணர்த்தி நின்றன.

செய்யுள் வழக்கிலும், ஒருமை-பன்மை விகுதிகளைப் பெறாமல் வினை முற்றுகளே ஒருமை பன்மையை உணர்த்துதல் உண்டு.

எடுத்துக்காட்டு:

வாள் ஒடிந்தது – ஒருமை
வாள் ஒடிந்தன – பன்மை
சொல் தளர்ந்தது – ஒருமை
சொல் தளர்ந்தன – பன்மை
புலி பாய்ந்தது – ஒருமை
புலி பாய்ந்தன – பன்மை

வாள், சொல், புலி என்னும் அஃறிணைப் பெயர்கள், தம் பின்வரும் வினைமுற்றுச் சொற்களால் பால்காட்டி நின்றன. (ஒடிந்தது, ஒடிந்தன, தளர்ந்தது, தளர்ந்தன முதலியவை வினைமுற்றுகள் ஆகும்)

பால் பகா அஃறிணைப் பெயர்கள் பால் பொதுமைய

(நன்னூல் **281)**

இன்ன பால் என்று பிரித்துச் சொல்ல முடியாத பெயர்ச் சொற்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

குறிப்பு**:** ஒன்றன்பாலைக் காட்டும் 'து' விகுதியையும், பலவின் பாலைக் காட்டும் அ, வை, கள் என்னும் விகுதிகளுள் ஒன்றையும் பெறாத அஃறிணைப் பெயர்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் ஆகும். இவை ஒன்றன் பாலுக்கும் பலவின்பாலுக்கும் பொதுவாய் வரும்.

## 4.2 இருதிணைப் பொதுப்பெயர்கள்

பண்டைக் காலத்தில், மக்களுக்கு வைக்கும் பெயர்களைத் தம்மோடு வாழும் விலங்கு, தோட்டம் போன்றவற்றிற்கும் இட்டு வழங்கினர். அதனால் ஒரே பெயர் இருதிணைகளிலும் கலந்து வழங்கிற்று. அதனை விரவுப் பெயர் என்று வழங்கினர். மேலும் சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது, சந்திரன் உதித்தான், சந்திரன் உதித்தது என ஒரு பொருளையே இருதிணையிலும் குறிப்பிடுவதும் உண்டு.

உயர் திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான இப்பெயர்கள் இருதிணைப் பொதுப் பெயர்கள் என அழைக்கப்படுகின்றன. இவை தம்மோடு வரும் பெயராலும் வினையாலும் பால்களைச் சுட்டி நிற்கும்.

முதற் பெயர்கள் நான்கும் சினைப் பெயர்கள் நான்கும், சினைமுதற் பெயர்கள் நான்கும், முறைப் பெயர்கள் இரண்டும், தன்மைப் பெயர் நான்கும், முன்னிலைப் பெயர்கள் ஐந்தும், எல்லாம், தான், தாம் என்பனவும், இவை போன்ற பிறவும் இருதிணைக்கும் உரிய பொதுப் பெயர்களாம்.

| | |
|---|---|
| முதற்பெயர் | – 4 (ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை) |
| சினைப்பெயர் | – 4 (ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை) |
| சினைமுதற்பெயர் | – 4 (ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை) |
| முறைப்பெயர் | – 2 (ஆண்மை, பெண்மை) |
| தன்மைப்பெயர் | – 4 (யான், நான், யாம், நாம்) |
| முன்னிலைப்பெயர் | – 5 (எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ) |
| படர்க்கைப் பெயர் | – 2 (தான், தாம்) |
| மூவிடப் பொதுப்பெயர் | – 1 (எல்லாம்) |
| | - 26 |

ஆக இருதிணைப் பொதுப் பெயர்கள் மொத்தம் இருபத்து ஆறு ஆகும்.

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதல் பெயரொரு நான்கும் முறை இரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்
எல்லாம் தாம் தான் இன்னன பொதுப்பெயர்

(நன்னூல்:282)

### 4.2.1 முதற்பெயர் (4)

முதற்பெயர் என்பது முழுமையான ஒரு பொருளுக்கு வழங்கப்பட்டு வரும் பெயர் ஆகும். இது ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என நான்கு வகைப்படும்.

**(1)** ஆண்மை முதற்பெயர்

சாத்தன் – இவன்
சாத்தன் – இவ்வெருது

சாத்தன் என்னும் ஆண்மை முதற்பெயர் இருதிணை ஆண்பாலுக்கும் பொது ஆயிற்று. சாத்தன் என்ற பெயர் வீட்டில் உள்ள மகனுக்கும், அதே வீட்டில் வளருகின்ற ஒரு

காளை மாட்டுக்கும் பெயராக அமைந்துள்ளது. எனவே சாத்தன் என்பது இரு திணை ஆண்பாலுக்கும் பொதுவாக வந்துள்ளது.

**(2)** பெண்மை முதற்பெயர்

சாத்தி – இவள்
சாத்தி – இப்பசு

சாத்தி என்னும் பெண்மை முதற்பெயர் இருதிணைப் பெண்பாலுக்கும் பொது ஆயிற்று. மேலே கூறியது போலவே, மகளுக்கும், வீட்டில் வளருகின்ற பசுமாட்டிற்கும் சாத்தி என்ற பெயர் பொதுவாக வந்துள்ளது.

**(3)** ஒருமை முதற்பெயர்

கோதை இவன் – உயர்திணை ஆண்பால்
கோதை இவள் – உயர்திணைப் பெண்பால்
கோதை இது – அஃறிணை ஒன்றன்பால்

கோதை என்ற ஒருமை முதற்பெயர், இருதிணையிலும் ஒருமை மூன்றற்கும் பொதுவாகி வந்துள்ளது.

**(4)** பன்மை முதற்பெயர்

கோதைகள் இவர் – உயர்திணைப் பலர்பால்
கோதைகள் இவை – அஃறிணைப் பலவின்பால்

கோதைகள் என்னும் பன்மை முதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொது ஆயிற்று.

### 4.2.2 சினைப்பெயர் (4)

உறுப்பின் காரணமாக வைக்கப்பட்டு வழங்கி வரும் பெயர் சினைப்பெயர் ஆகும். (சினை என்பதற்கு உறுப்பு என்று பொருள்.) இதுவும் ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என நான்காகும்.

**(1)** ஆண்மைச் சினைப்பெயர்

முடவன் இவன் – உயர்திணை ஆண்பால்
முடவன் இவ்வெருது – அஃறிணை ஆண்பால்

முடவன் என்ற ஆண்மைச் சினைப்பெயர் இருதிணை ஆண்பாலுக்கும் பொதுவாயிற்று.

**(2)** பெண்மைச் சினைப்பெயர்

முடத்தி இவள் – உயர்திணைப் பெண்பால்
முடத்தி இப்பசு – அஃறிணைப் பெண்பால்

முடத்தி என்னும் பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண்பாலுக்கும் பொது ஆயிற்று.

(3) ஒருமைச் சினைப்பெயர்

செவியிலி இவன் – உயர்திணை ஆண்பால்
செவியிலி இவள் – உயர்திணைப் பெண்பால்
செவியிலி இது – அஃறிணை ஒன்றன்பால்

செவியிலி என்ற ஒருமைச் சினைப்பெயர் இருதிணையிலும் ஒருமை மூன்றற்கும் பொது ஆயிற்று.

(4) பன்மைச் சினைப்பெயர்

செவியிலிகள் இவர் – உயர்திணைப் பலர்பால்
செவியிலிகள் இவை – அஃறிணைப் பலவின்பால்

செவியிலிகள் என்ற பன்மைச் சினைப்பெயர் இருதிணையிலும் பன்மைக்குப் பொது ஆயிற்று.

### 4.2.3 சினை முதற்பெயர் (4)

உறுப்பையும் உறுப்பை உடைய முதற்பொருளையும் கொண்டு வழங்கும் பெயர் சினை முதற்பெயர் ஆகும். இதுவும் ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என நான்காகும்.

(1) ஆண்மைச் சினை முதற்பெயர்

முடக்கொற்றன் இவன் – உயர்திணை ஆண்பால்
முடக்கொற்றன் இவ்வெருது – அஃறிணை ஆண்பால்

இப்பெயர் இருதிணையிலும் ஆண்பாலுக்குப் பொதுவாக வந்தது.

(2) பெண்மைச் சினை முதற்பெயர்

முடக்கொற்றி இவள் – உயர்திணைப் பெண்பால்
முடக்கொற்றி இப்பசு – அஃறிணைப் பெண்பால்

இப்பெயர் இருதிணையிலும் பெண்பாலுக்குப் பொதுவாக வந்தது.

(3) ஒருமைச் சினைமுதற்பெயர்

கொடும்புற மருதி இவன் – உயர்திணை ஆண்பால்
கொடும்புற மருதி இவள் – உயர்திணைப் பெண்பால்
கொடும்புற மருதி இது – அஃறிணை ஒன்றன்பால்

இப்பெயர் இருதிணையிலும் ஆண், பெண், ஒன்று என மூன்று ஒருமைக்கும் பொதுவாக வந்தது.

(4) பன்மைச் சினைமுதற்பெயர்

கொடும்புற மருதிகள் இவர் – உயர்திணைப் பலர்பால்
கொடும்புற மருதிகள் இவை – அஃறிணைப் பலவின்பால்

இப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாக வந்தது.

### 4.2.4 முறைப்பெயர் (2)

உறவு பற்றி வரும் பெயர்கள் முறைப்பெயர் எனப்படும். இவை தந்தை, தாய் என்னும் இரண்டாகும்.

தந்தை இவன் ஆண்மை முறைப்பெயர், இருதிணை

தந்தை இவ்வெருது ஆண்பாலுக்கும் பொது ஆயிற்று.

தாய் இவள் பெண்மை முறைப்பெயர், இருதிணைப்

தாய் இப்பசு பெண்பாலுக்கும் பொது ஆயிற்று.

### 4.2.5 தன்மைப் பெயர் (4)

தன்மையில் வரும் யான், நான், யாம், நாம் ஆகிய நான்கும் இருதிணைக்கும் பொதுவாகும்.

யான் நம்பி யான் என்ற தன்மைப் பெயர்,

யான் நங்கை இரு திணை ஒருமை மூன்றற்கும்

யான் பறவை பொது ஆயிற்று.

யாம் மக்கள் யாம் என்ற தன்மைப் பெயர்,

யாம் பறவைகள் இரு திணைப் பன்மைக்கும்

பொது ஆயிற்று.

நான், நாம் என்பனவும் நான் நம்பி, நான் நங்கை, நான் பறவை, நாம் மக்கள், நாம்

பறவைகள் என வரும்.

### 4.2.6 முன்னிலைப் பெயர் (5)

முன்னிலையில் வரும் நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர் ஆகிய ஐந்தும் இருதிணைக்கும் பொதுவாகும்.

| | |
|---|---|
| நீ நம்பி | நீ என்ற முன்னிலை ஒருமைப் |
| நீ நங்கை | பெயர் இருதிணை ஒருமை |
| நீ அன்னம் | மூன்றிற்கும் பொது ஆயிற்று நீர் |
| நீர் மக்கள் | என்ற முன்னிலை ப்பன்மைப்பெயர் |
| நீர் அன்னங்கள் | இரு திணைப் பன்மைக்கும் பொது |
| | ஆயிற்று. |

எல்லீர், நீயிர், நீவிர் என்பனவும் இவ்வாறே இருதிணைக்கும் பொதுவாக வரும்.

### 4.2.7 படர்க்கைப் பெயர் (2)

படர்க்கையில் வரும் தாம், தான் ஆகிய இரண்டும் இரு திணைக்கும் பொதுவாகும்.

| | |
|---|---|
| அவர் தாம் | தாம் என்னும் படர்க்கைப் பெயர் |
| அவை தாம் | இருதிணைப் பன்மைக்கும் பொது |
| | ஆயிற்று |

| | |
|---|---|
| அவன்தான் | தான் என்னும் படர்க்கைப் |
| அவள்தான் | பெயர் இருதிணை ஒருமை |
| அதுதான் | மூன்றற்கும் பொது ஆயிற்று |

### 4.2.8 மூவிடப் பொதுப்பெயர் (1)

‘எல்லாம்’ என்பது மூவிடப் பொதுப்பெயராகும். இது இரு திணைப் பன்மைக்கும் பொதுவாகும்.

நாம் எல்லாம் — எல்லாம் என்னும் மூவிடப் பொதுப்

நீவிர் எல்லாம் — பெயர் மூவிடங்களுக்கும் பொது

அவர் எல்லாம் — ஆயிற்று.இருதிணைப் பன்மைக்கும்

அவை எல்லாம் — பொது ஆயிற்று.

### 4.2.9 பொதுப்பெயர்கள் வினைச்சொல் கொண்டு பால் உணர்த்தும்

பொதுப்பெயர்கள் தம்மோடு சேர்ந்து வரும் பெயர் கொண்டும் வினைகொண்டும் இன்னபால் என அறியப்படும் என முன்னர்க் கண்டோம். இதுவரை நாம் கண்ட எடுத்துக்காட்டுகளில் பெயர்ச்சொல் கொண்டு பால் தெளிவுபடுவதைக் கண்டோம். இனி, தொடர்ந்து வரும் வினைச்சொல் மூலம் பொதுப்பெயர் பால் உணர்த்துவதற்குச் சில எடுத்துக்காட்டுகள் காண்போம்.

சாத்தன் வந்தான் – உயர்திணை ஆண்பால்
சாத்தன் வந்தது – அஃறிணையில் ஆண்பால்
குழந்தையைத் தேடித் தாய் வந்தாள் – உயர்திணைப் பெண்பால்
கன்றைத் தேடித் தாய் வந்தது – அஃறிணையில் பெண்பால்

தான் சொன்னான் – உயர்திணை ஆண்பால்
தான் செய்தாள் – உயர்திணைப் பெண்பால்
தான் மேய்ந்தது – அஃறிணை ஒன்றன்பால்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 4.3 இடப்பெயர்கள் எண் உணர்த்தல்

மூவிடப் பெயர்களாவன தன்மை, முன்னிலை, படர்க்கை என நீங்கள் அறிவீர்கள். இவை இருதிணைப் பொதுப் பெயர்களாக வருவதை மேலே கண்டீர்கள். இவற்றுள் ஒருமை உணர்த்துபவற்றையும், பன்மை உணர்த்துபவற்றையும் தொகுத்துக் காணலாம்.

அவற்றுள், தன்மைப் பெயர் யான், நான், யாம், நாம், என நான்காகும். முன்னிலைப் பெயர், எல்லீர், நீயிர், நீவீர், நீர், நீ என ஐந்தாகும். தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர் ஆகிய இவ்வொன்பதும் அல்லாத பெயர்கள் படர்க்கை இடத்திற்கு உரியன. இவற்றுள் ‘எல்லாம்’ என்ற ஒரு பெயர் மட்டுமே மூவிடங்களுக்கும் உரியதாய் வரும். இவற்றுள் யான், நான், நீ, தான் – ஒருமை உணர்த்துவன. யாம், நாம், நீர், நீயிர், நீவீர், எல்லீர், தாம், எல்லாம் ஆகியவை பன்மை உணர்த்துவன.

## 4.4 எண்ணால் வரும் உயர்திணைப் பெயர்கள்

ஒன்று என்னும் எண்ணின் அடியாக ஒருவன், ஒருத்தி என்ற பெயர்கள் வரும்.

ஒருவன் – ஆண்பால்
ஒருத்தி – பெண்பால்

ஒருவன் என்பதை நோக்கிப் பெண் பாலாக ஒருவள் எனக் கூறக் கூடாது. அதே போல ஒருத்தி என்பதை நோக்கி ஆண்பாலாக ஒருத்தன் என்று கூறக் கூடாது.

ஒன்றுக்கு மேல் இரண்டு மூன்று முதலாகிய எண்களால் ஆண்பால் பெயரும், பெண்பால் பெயரும் வாரா. அதாவது இருவன், இருத்தி என்றாற் போன்ற பெயர்கள் வாரா.

ஒருவர், இருவர், மூவர் எனவரும்; இவை இருபாலாருக்கும் பொதுவாகும்.

ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில
(நன்னூல் -288)

மேலும் இவ் ஒருவர் என்ற சொல், சொல் அளவில் பன்மையாய்ப் பொருள் அளவில் ஒருமையாய் இங்கு வந்துள்ளது.

ஒருவர் என வழங்கும் சொல், உயர்திணை ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவாய் அத்திணைக்குரிய பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டு முடியும்.

எடுத்துக்காட்டு

ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பார்
பெண்டிருள் ஒருவர் கணவன் வழி நிற்பார்

இங்கே,

ஒருவர் நிற்பான்
ஒருவர் நிற்பாள்

எனப் பகுதிக்கு ஏற்ப ஒருமைச் சொல்லைக் கொள்ளாது, ஒருவர் நிற்பார் என விகுதிக்கு ஏற்பப் பன்மைச் சொல்லையே கொண்டு முடிந்தது.

மேலும், உரையாசிரியர் கூறும் கருத்தை இங்கே காணலாம்.

உயர்த்திக் கூறும் பொருட்டு 'ஆர்' என்னும் விகுதி பெற்ற இருதிணைப் பொதுப்பெயரும், பால்பகா அஃறிணைப் பெயரும், சிறுபான்மை உயர்திணைப் பெயரும் பன்மைச் சொல்லோடு முடியும்.

எடுத்துக்காட்டு

சாத்தனார் வந்தார் இருதிணைப் பொதுப்பெயர்கள்

| | |
|---|---|
| முடவனார் வந்தார் | பன்மைச் சொல் கொண்டு முடிந்தன. |
| முடக்கொற்றனார் வந்தார் | |
| தந்தையார் வந்தார் | |

| | |
|---|---|
| நரியார் வந்தார் | பால்பகா அஃறிணைப் பொதுப் |
| பூனையார் வந்தார் | பெயர்கள் பன்மைச்சொல் கொண்டு |
| | முடிந்தன. |

| | |
|---|---|
| நம்பியார் வந்தார் | உயர்திணைப் பெயர்கள் பன்மைச் |
| நங்கையார் வந்தார் | சொல் கொண்டு முடிந்தன. |
| இறைவனார் வந்தார் | |
| அகத்தியனார் வந்தார் | |

## 4.5 தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும்

தொழிற்பெயர் பற்றியும், வினையாலணையும் பெயர் பற்றியும் முந்தைய ‘பெயர்ச்சொல்’ பற்றிய பாடத்தில் அறிந்துள்ளோம்.

ஒருபொருள் செய்யும் தொழிலைக் குறித்து வரும் பெயர்ச்சொல் தொழிற்பெயர் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

வருதல், இருத்தல், உண்ணல், உறங்கல்

ஒரு வினைமுற்றுச் சொல், தன்னுடைய வினைமுற்றுப் பொருளைக் காட்டாது, அவ்வினையைச் செய்தவனையோ அல்லது செய்த பொருளையோ குறிக்கும் பெயர்ப் பொருளில் வருவது வினையாலணையும் பெயர் எனப்படும்.

எடுத்துக்காட்டு

படித்தவர் தேர்வில் வெற்றி பெற்றனர்

படித்தவர் என்பது படித்த செயலைக் குறிக்காமல், அதைச் செய்த மாணவரைக் குறித்துப் பெயராகி வந்தது. ஆகவே, ‘படித்தவர்’ – வினையாலணையும் பெயராகும்.

தொழிற் பெயர்கள் படர்க்கை இடத்திற்கே உரியவை ஆகும். வினையாலணையும் பெயர்கள் தனித்தனி மூன்றிடத்திற்கும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) உரியவையாம்.

எடுத்துக்காட்டு

வருகை, மறதி – தொழிற்பெயர்கள் இவை படர்க்கை இடத்திற்கே உரியன.

வருகை நன்று, மறதி தீது – என வரும்.

உண்டேன், உண்டாய், உண்டானை என்ற வினையாலணையும் பெயர்கள் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களுக்குத் தனித்தனியே உரியனவாகும்.

உண்டேனை (உண்ட என்னை) – தன்மை
உண்டாய்க்கு (உண்ட உனக்கு) – முன்னிலை
உண்டானை (உண்டவனை) – படர்க்கை

- தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேறுபாடு

தொழிற் பெயர், வினையாலைணையும் பெயர் ஆகிய இரண்டும் வினையிலிருந்து பிறக்கும் பெயர்கள் என்ற ஒற்றுமை உடையன.

எனினும், தொழிற்பெயர் தொழிலுக்குப் பெயராய் வந்து படர்க்கை இடத்திற்கே

உரியது ஆகும்.

வினையாலணையும் பெயர், தொழிலை உடைய பொருளுக்குப் பெயராய் வந்து மூன்று இடங்களுக்கும் தனித்தனியே உரியதாக வரும்.

வினையின் பெயரே படர்க்கை; வினையால்
அணையும் பெயரே யாண்டுமாகும்.

**(நன்னூல் -286)**

(வினையின் பெயர் = தொழிற்பெயர்; வினை= தொழில்)

## 4.6 தொகுப்புரை

பொதுப் பெயர்கள் எனும் இப்பாடத்தின் வாயிலாக, பால்பகா அஃறிணைப் பெயர்கள், இருதிணைக்குரிய பொதுப் பெயர்கள், பால்பொதுப் பெயர், மூவிடங்களிலும் வரும் பொதுப்பெயர் தொடர்பான செய்திகளை அறிந்து கொண்டோம்.

அஃறிணைப் பெயர்களுள் ஒருமை என்றும் பன்மை என்றும் பால்பகுக்கப்படாத பெயர்கள் உள்ளன. அவை ஒன்றன்பாலுக்கும், பலவின்பாலுக்கும் பொதுப் பெயர்களாக வரும் என்பதைக் கண்டோம்.

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் இருதிணைப் பொதுப் பெயர்கள் ஆகும்; அவை முதற்பெயர் முதலாக இருபத்து ஆறு ஆகும் எனத் தெளிந்தோம். இப்பெயர்கள் ஒவ்வொன்றும் உயர்திணையிலும் அஃறிணையிலும் தனக்குரிய பால்களை ஏற்று வரும் என்பது கூறப்பட்டது.

தொழிற்பெயர், படர்க்கைக்கே உரியதெனவும், வினையாலணையும் பெயர், மூவிடங்களுக்கும் உரியதெனவும் அறிந்து கொண்டோம். மேலும் எண்ணால் வரும் உயர்திணைப் பெயர், இருபாற் பொதுப் பெயர் ஆகியன பற்றியும் உரிய எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவாகத் தெரிந்து கொண்டோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 5

# A02115 வேற்றுமை - 1

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துகின்ற வேற்றுமைகள் பற்றிக் கூறுகிறது. முதலாம் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை), இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகிய வேற்றுமைகளின் உருபுகளையும் பொருள்களையும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- வேற்றுமை பற்றிய இலக்கணத்தை அறியலாம்.
- பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது ஏற்படும் மாற்றங்கள் குறித்துத் தெரிந்துகொள்ளலாம்.
- முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகிய நான்கு வேற்றுமைகளின் உருபுகளும், பொருள்களும் பற்றித் தெளிவுபெறலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை

5.1 வேற்றுமை – விளக்கமும் வகைகளும்

5.2 முதல் வேற்றுமை

5.3 இரண்டாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

5.4 மூன்றாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

5.5 நான்காம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

5.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 5.0 பாட முன்னுரை

முன்னர்ப் படித்த பாடங்களில் பெயர்ச்சொற்கள் பற்றியும், திணை, பால், பொதுப்பெயர்கள் பற்றியும் விளக்கமாக அறிந்தோம்.

இனி, அப்பெயர்ச்சொற்கள் தொடரில் அமையும்போது பொருள் வேறுபடும் முறை பற்றி அறிவோம்.

ஒற்றுமைக்கு எதிர்ச்சொல் வேற்றுமை ஆகும். ஒன்றுபடுத்திக் காட்டுவது ஒற்றுமை. வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும். சான்றாக இரண்டு தொடர்களைக் காணலாம்.

மாறன் அடித்தான்

மாறனை அடித்தான்

இந்த இரண்டு தொடர்களில் உள்ள பொருள் வேறுபாட்டைக் கவனியுங்கள். முதல் தொடர் மாறன் வேறொருவனை அடித்ததாகக் கூறுகிறது. இரண்டாவது தொடர், மாறனை வேறொருவன் அடித்ததாகச் சொல்லுகிறது. இந்த வேறுபாடு எதனால் ஏற்பட்டது? மாறன் என்ற சொல் ‘ஐ’ என்னும் எழுத்தை இறுதியில் பெற்றதனால் ஏற்பட்டது. இவ்வாறு பெயரின் பொருளை வேறுபடுத்த அதன் இறுதியில் சேர்க்கப்படும் உறுப்புக்கு ‘உருபு’ என்று பெயர்.

ஒரு பெயரின் பொருளை (கருத்தை) வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும்.

இனி, அவ்வேற்றுமை பற்றிய விரிவான விளக்கத்தையும் அதன் வகைகளையும் அறிந்து கொள்ளலாம்.

## 5.1 வேற்றுமை - விளக்கமும் வகைகளும்

ஒரு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும் என்று பார்த்தோம்.

பொருளை வேறுபடுத்திக் காட்டத் துணை செய்யும் உறுப்புக்கு வேற்றுமை உருபு என்று பெயர். இவ்வாறு வேறுபடுத்துவதால்தான் ஒரு வாக்கியத்தின் பொருள் நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது.

எடுத்துக்காட்டாக,

சேரன் சோழன் வென்றான்
தமிழ்நாடு தில்லி பேச்சு
புலிகொல் யானை

என்ற தொடர்களைக் காணுங்கள். மேற்கண்ட தொடர்களின் பொருள் விளங்கவில்லை.

முதல் தொடரில் யார் யாரை வென்றது என்று பொருள் விளங்காமல் இருக்கின்றது. சேரனைச் சோழன் வென்றானா? அல்லது சோழனைச் சேரன் வென்றானா? என்பது தெரியவில்லை. பொருள் நன்கு விளங்குவதற்காகச் சேரன் என்னும் பெயரினை அடுத்து 'ஐ' என்னும் உறுப்பினைச் சேர்த்துவிட்டால் 'சேரனைச் சோழன் வென்றான்' என்று பொருள் நன்கு விளங்குகின்றது. இல்லையென்றால் சோழன் என்னும் பெயரினை அடுத்து 'ஐ' என்னும் உறுப்பினைச் சேர்த்துவிட்டால் 'சேரன் சோழனை வென்றான்' என்று பொருள் நன்கு விளங்குகின்றது.

இரண்டாம் தொடரில் தமிழ்நாட்டுடன் தில்லி பேச்சா? அல்லது தில்லியுடன் தமிழ்நாடு பேச்சா? என்ற பொருள் விளங்காத நிலை ஏற்படுகின்றது. தமிழ்நாடு என்பதை அடுத்து 'உடன்' என்னும் உறுப்பினைச் சேர்த்துவிட்டால் 'தமிழ்நாட்டுடன் தில்லி பேச்சு' என்று பொருள் நன்கு விளங்குகின்றது.

மூன்றாம் தொடராகிய 'புலிகொல் யானை' என்பதில் 'புலியால் கொல்லப்பட்ட யானையா?' அல்லது 'புலியைக் கொன்ற யானையா?' என்ற பொருள் ஐயம் உண்டாகின்றது. புலி என்னும் பெயரினை அடுத்து 'ஆல்' என்னும் உறுப்பைச் சேர்த்துவிட்டால் 'புலியால் கொல்லப்பட்ட யானை' எனப் பொருள் ஆகின்றது. 'ஐ' என்னும் உறுப்பினைச் சேர்த்தால் 'புலியைக் கொன்ற யானை' எனப் பொருள்படுகின்றது.

இவ்வாறு சொற்றொடர்களில் தோன்றும் ஐயம் நீங்கி, பொருள் நன்கு விளங்குவதற்காகப் பெயர்களோடு சேர்க்கப்படும் உறுப்புக்கு உருபு என்று பெயர். பொருளை வேறுபடுத்துவதற்கு வேற்றுமை என்று பெயர். இவ்வேற்றுமை தமிழில் எட்டு வகைப்படும்.

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை

(நன்னூல் : 291)

- வேற்றுமை வகைகள்

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதற்கு அதன் ஈற்றில் (இறுதியில்) சேர்க்கும் சொற்கள் வேற்றுமை உருபுகள் எனப்படும். அவை, ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியனவாம்.

உருபு – இது வேற்றுமையைக் காட்டும் உருவம் அல்லது அடையாளம் ஆகும். முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்று வேற்றுமை எட்டு ஆகும். முதல் வேற்றுமை, எழுவாய் வேற்றுமை எனவும், எட்டாம் வேற்றுமை, விளிவேற்றுமை எனவும் பெயர் பெறும்.

எடுத்துக்காட்டு

1) முல்லை மலர்ந்தது
2) அவள் முல்லையைச் சூடினாள்
3) முல்லையால் மணம் பெற்றாள்
4) முல்லைக்கு நீர் ஊற்று
5) முல்லையின் எடுத்த இதழ்
6) முல்லையினது நறுமணம்
7) முல்லைக்கண் வண்டுகள் மொய்த்தன
8) முல்லையே! நீ மாலையில் மலர்கிறாய்!

மேலே காட்டிய எடுத்துக்காட்டுகளில் முல்லை என்னும் பெயர்ப்பொருள் எட்டுவகையாக வேற்றுமை அடைந்திருக்கிறது.

விளக்கம்:

**1.** முல்லை மலர்ந்தது — முதல் வேற்றுமை; எழுவாய்ப் பொருள்

**2.** முல்லையை — இரண்டாம் வேற்றுமை; ஐ என்பது இரண்டாம் வேற்றுமை உருபு, செயப்படுபொருள்.

**3.** முல்லையால் — மூன்றாம் வேற்றுமை; ஆல் : மூன்றாம் வேற்றுமை உருபு, கருவிப்பொருள்.

**4.** முல்லைக்கு — நான்காம் வேற்றுமை; கு : நான்காம் வேற்றுமை உருபு, கோடல்பொருள். (கொள்ளுதல்)

**5.** முல்லையின் — ஐந்தாம் வேற்றுமை; இன் : ஐந்தாம் வேற்றுமை உருபு, நீங்கல் பொருள்.

**6.** முல்லையினது — ஆறாம் வேற்றுமை; அது : ஆறாம் வேற்றுமை உருபு, கிழமைப்பொருள். (உடைமைப்பொருள்)

**7.** முல்லைக்கண் ஏழாம் வேற்றுமை; கண் : ஏழாம் வேற்றுமை உருபு, இடப்பொருள்.

**8.** முல்லையே ! எட்டாம் வேற்றுமை; விளிப்பொருள். (அழைப்பு)

இந்த எடுத்துக்காட்டுகளில் முதல் வேற்றுமைக்கும், எட்டாம் வேற்றுமைக்கும் வேற்றுமை உருபுகள் இல்லை. மற்றவற்றில் அவ்வுருபுகள் பெயர்ச்சொல்லின் இறுதியில் வந்து பெயர்ப்பொருளை வேறுபடுத்தின.

இத்தொடர்களில் மூன்று உறுப்புகள் உள்ளன.

1) வேற்றுமையை ஏற்ற பெயர்
2) வேற்றுமை உருபு
3) பயனிலை

இம் மூன்றின் துணை கொண்டே வேற்றுமையை அறிதல் வேண்டும்.

## 5.2 முதல் வேற்றுமை

திரிதல் இல்லாத (எந்த மாற்றமும் ஏற்படாத) பெயரே முதல் வேற்றுமை ஆகும். இதனை, எழுவாய் வேற்றுமை எனவும் கூறுவர். இதற்கு உருபு இல்லை. இது தானே தன்னை வினைமுதல் (வினையைச் செய்தவன்) பொருளாக வேற்றுமை செய்கிறது.

'வளவன்' – இது என்ன சொல்? பெயர்ச்சொல். இச்சொல் என்ன பொருளில் வந்தது? பெயர்ப் பொருளில் வந்தது.

வளவன் படித்தான் : தனியே நின்றபோது பெயர்ப்பொருளில் வந்த வளவன் என்னும் சொல் இத்தொடரில் படித்தல் தொழிலைச் செய்த வினைமுதல் பொருளாக வேறுபட்டது. படித்தான் என்னும் வினை, வளவனை வினைமுதல் பொருள் ஆக்கியது.

இவ்வாறு பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. படித்தான் என்பது இத்தொடரின் பயனைத் தெரிவிப்பதால் அதனைப் பயனிலை என்பர்.

எட்டு வேற்றுமைகளுள் திரிபு இல்லாத (மாறுபாடு இல்லாத) பெயரே முதல் வேற்றுமையின் உருபு ஆகும். இது வினையையும், பெயரையும் வினாவையும் பயனிலையாகக் கொண்டு முடியும். பயனிலை (பயன் + நிலை) வாக்கியத்தின் கருத்தை முடித்து நிற்கும் சொல் ஆகும்.

எடுத்துக்காட்டு

குமணன் கொடுத்தான் வினையைப் பயனிலையாகக்
கொண்டு முடிந்தன.
குமணன் வாழ்க
குமணன் பெருவள்ளல் பெயரைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தன.
குமணன் இவன்
குமணன் அரசனா? வினாவைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தன.
குமணன் கொடுப்பானா?

அவற்றுள்,
எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே
வினை பெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே

*(நன்னூல் : 295)*

(திரிபுஇல் = மாற்றம் இல்லாத)

எழுவாய் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. என்றாலும், இக்காலத்தே ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை என்பனவும், என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பவை என்பனவும் சொல் உருபுகளாக வரும் என உரையாசிரியர் கூறுவர்.

எடுத்துக்காட்டு

குமணனானவன் கொடுத்தான்
ஔவை என்பவர் பெரும்புலவர்
கோயிலென்பது குளிர்பொழில் தில்லை

யானையானது வந்தது

என வரும்.

மேலும், எல்லாப் பெயர்களும் எழுவாய்த் தன்மை பெற்று நிற்பதால் எல்லாப் பெயர்களுமே எழுவாய் வேற்றுமைகள் ஆகும்.

சுருங்கக்கூறின்.

முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) கருத்தாப் பொருளை (வினைமுதலை) உணர்த்தி வரும். பெயர்ச்சொல் எத்தகைய வேறுபாடும் அடையாமல் வரும்.

வினை முதல், செய்பவன், கருத்தா என்பன ஒரே பொருளை உணர்த்தும் சொற்கள் ஆகும்.

## 5.3 இரண்டாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பது மட்டுமே. இதன் பொருள் தன்னை ஏற்ற பெயர்ப்பொருளை ஆக்கப்படு பொருளாகவும், அழிக்கப்படு பொருளாகவும், அடையப்படு பொருளாகவும் இவை போல்வன பிறவாகவும் வேற்றுமை செய்வதாகும். ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமையாகும். எனவே இது செயப்படுபொருள் வேற்றுமை எனவும் கூறப்படும். செயப்படுபொருளாக வேறுபடுத்தப் பெயர்ச்சொல்லின் இறுதியில் 'ஐ' என்னும் உருபு வந்து சேரும். இதன் பொருள் செயப்படுபொருள் ஆகும்.

எடுத்துக்காட்டு

குடத்தை வனைந்தான் – ஆக்கப்படுபொருள் (உருவாக்குதல்)

கோட்டையை இடித்தான் – அழிக்கப்படும் பொருள்

காட்டை அடைந்தான் – அடையப்படுபொருள்

வீட்டைத் துறந்தான் – துறக்கப்படுபொருள் (விட்டு விலகுதல்)

புலியைப் போன்றான் – ஒத்தல் பொருள் (ஒப்புமை)

பொன்னை உடையான் – உடைமைப் பொருள்

செயப்படுபொருள், செய்பொருள், கருமம், காரியம் என்பன ஒரே பொருளைத் தருவன.

வினைமுதல் (எழுவாய்) செய்யும் தொழிலின் பயனை ஏற்பது எதுவோ அது செயப்படுபொருள் எனப்படும்.

வாக்கியத்தில், (சொற்றொடரில்) கருத்தை முடிக்கும் சொல் பயனிலை ஆகும். பயனிலையைக் கொண்டு, யாரை, எதை, எவற்றை என்ற கேள்விகளில் பொருத்தமான ஒன்றைக் கேட்டால் அதற்கு வரும் விடை செயப்படுபொருள் ஆகும்.

> இரண்டாவதன் உருபு ஐயே ; அதன் பொருள்
> ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
> ஒத்தல் உடைமை ஆதி ஆகும்
> (நன்னூல் : 296)

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.4 மூன்றாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாகும். கருவிப்பொருள், கருத்தாப்பொருள், உடன் நிகழ்ச்சிப் பொருள் ஆகிய மூன்றும் மூன்றாம் வேற்றுமையின் பொருள்கள் ஆகும். ஆல், ஆன் என்ற இரண்டும் கருவிப் பொருளுக்கும், கருத்தாப் பொருளுக்கும், ஒடு, ஓடு என்ற இரண்டும் உடன் நிகழ்ச்சிப் பொருளுக்கும் பெரும்பாலும் பயன்பட்டு வருகின்றன.

இரண்டாம் வேற்றுமைப் பொருளாகிய காரியத்திற்கு வேண்டும் கருவிப் பொருளைத் தருவதால், இது மூன்றாம் வேற்றுமை ஆயிற்று. எனவே இதனைக் கருவி வேற்றுமை என்றும் கூறுவர்.

எடுத்துக்காட்டு

கத்தியால் வெட்டினான் கருவிப்பொருள்
நளன்கதை வெண்பாவால் ஆனது

தமிழ்ச்சங்கம் பாண்டியனால் அமைக்கப்பட்டது கருத்தாப்பொருள்
குகைக்கோயில் பல்லவனால் கட்டப்பட்டது

கோவலனொடு கண்ணகி வந்தாள் உடன்நிகழ்ச்சிப் பொருள்
ஆசிரியரோடு மாணவன் வந்தான்

- கருவிப் பொருள்

கருவிப் பொருளானது முதல்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

முதல்கருவி செயப்படுபொருளோடு ஒற்றுமை உடையது; செயப்படுபொருளுக்கு இன்றியமையாதது; தானே செயப்படு பொருளாக அமைவது என்பர்.

துணைக்கருவிக்கு இலக்கணம் கூறும்போது, ‘முதல்கருவி செயப்படுபொருளாக மாறும் வரைக்கும் துணையாக உடன் நின்று உதவுவது’ என்றும் கூறுவர்.

எடுத்துக்காட்டு

மண்ணால் குடத்தை வனைந்தான் – முதல்கருவி

சக்கரத்தால் குடத்தை வனைந்தான் – துணைக்கருவி

மண்ணால் ஆகிய குடம் என்பதில் மண் என்னும் முதல்கருவி, குடம் ஆகிய செயப்படுபொருளாக உள்ளது.

சக்கரத்தால் குடம் வனைந்தான் என்பதில் சக்கரம் என்னும் துணைக்கருவி மண்ணாகிய முதல்கருவிக்குத் துணையாய் அது குடமாக உருவாகும் வரை உடன் நிகழ்ந்தது.

ஆல், ஆன் உருபுகளுக்குப் பதிலாகக் கொண்டு என்பது சொல்லுருபாக வருவதுண்டு.

(எடுத்துக்காட்டு) ஊசி கொண்டு தைத்தான்

- உடன் நிகழ்ச்சிப்பொருள்

வினை கொண்டு முடியும் பொருளோடு உடன் இருப்பதாகக் காட்டும் பொருள் உடன் நிகழ்ச்சிப் பொருள் ஆகும். உடன் நிகழ்ச்சி என்பது ஒன்றாக நிகழ்வது.

எடுத்துக்காட்டு

பாரதியாரொடு பாரதிதாசனும் வந்தார்.
கோயிலோடு குளமும் அமைத்தான்.

பாரதியாரும் பாரதிதாசனும் வந்த செயல் உடன் நிகழ்ந்தது. அதாவது, இருவர் செயலும் ஒரே காலத்தில் நிகழ்ந்தன.

கோயிலும் குளமும் ஒரே காலத்தில் அமைக்கப்பட்ட நிகழ்வுகள் ஆகும்.

ஒடு, ஓடு ஆகிய உருபுக்குப் பதிலாக ‘உடன்’ என்னும் சொல்லைப் பயன்படுத்துவது உண்டு.

எடுத்துக்காட்டு

இராமனுடன் இலக்குவன் காட்டுக்குச் சென்றான்.

ஒரு சொல்லே உருபாக வருவதால் இது சொல்லுருபு எனப்படும்.

மூன்றாவதன் உருபு ஆல்ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடன்நிகழ்வு அதன் பொருள்

*(நன்னூல் : 297)*

## 5.5 நான்காம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

நான்காம் வேற்றுமையின் உருபு கு ஒன்றே ஆகும். இதன் பொருள் கோடல்பொருள் என்பதாம். கோடல்பொருள் என்பது கொடுப்பதை ஏற்றுக் கொள்ளுதலாகும்.

இவ்வேற்றுமையின் பொருள் கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்னும் ஏழு வகைப்படும்.

எடுத்துக்காட்டு

அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தான் – கொடை

கருடன் பாம்பிற்குப் பகை – பகை

கபிலர் பாரிக்கு நண்பர் – நட்பு

கம்பளி குளிருக்கு ஏற்றது – தகுதி

தோசைக்கு மாவு அரைத்தான் – அதுவாதல்

கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கிறான் – பொருட்டு
(காரணம்)

மாதவிக்கு மகள் மணிமேகலை – முறை (உறவு)

மேலே காட்டிய சான்றுகள் இன்னதற்கு இது என வருவதை அறிகிறோம். இதனைக் கோடல்பொருள் என்பர். இவை முறையே, கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய கோடல் பொருள்களாக வந்தன.

- சொல்லுருபுகள்

நான்காம் வேற்றுமைக்கு, ‘பொருட்டு’, ‘நிமித்தம்’, ‘ஆக’ என்னும் சொல் உருபுகளும் உண்டு. ‘ஆக’ என்ற சொல் உருபு மட்டும் ‘கு’ உருபோடு சேர்ந்துதான் வரும்.

எடுத்துக்காட்டு

கூலியின் பொருட்டு வேலை செய்தான் பொருட்டு
கல்வியின் பொருட்டுச் சென்றான்

கூலியின் நிமித்தம் உழைத்தான் நிமித்தம்
உணவின் நிமித்தம் உழைத்தான்

ஊருக்காக உழைத்தான் ஆக
கூலிக்காக உழைத்தான்

ஆக என்ற சொல்லுருபு மட்டும் கூலிக்கு + ஆக, ஊருக்கு + ஆக என, ‘கு’ உருபை ஒட்டியே வந்ததை அறியலாம்.

## 5.6 தொகுப்புரை

இப்பாடத்தில் முதல் வேற்றுமை முதல் நான்காம் வேற்றுமை வரையிலான வேற்றுமைகளின் பொருளை அறிந்து கொண்டோம்.

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை ஆகும். பொருளை வேறுபடுத்திக் காட்டும் உறுப்பு வேற்றுமை உருபு எனப்படும்.

வேற்றுமை எட்டு வகைப்படும். முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை), எட்டாம் வேற்றுமை (விளிவேற்றுமை) ஆகிய இரண்டு வேற்றுமைகளுக்கும் உருபுகள் இல்லை.

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலான ஆறு வேற்றுமைகளுக்குத் தனித்தனியே உருபுகள் உண்டு. இந்த ஆறு வேற்றுமைகளும் அவற்றிற்கு உரிய பொருள்களின் பெயரால் வழங்கப்படும்.

முதல் வேற்றுமையின் உருபு மாற்றமில்லாத பெயர் ஆகும். இது, வினையையும், பெயரையும், வினாவையும் கொண்டு முடியும். இவற்றிற்குக் கருத்தாவாய் நிற்பதே இதன் பொருள் ஆகும்.

இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' மட்டுமே. 'ஐ' உருபின் பொருள்கள் ஆறு.

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன. ஒடு, ஓடு என்னும் உருபுகள் தம்மையேற்ற பெயர்ப் பொருளை உடனிகழ்ச்சிப் பொருளாக வேறுபடுத்தும்.

நான்காம் வேற்றுமையின் உருபு 'கு' மட்டுமே. இதற்குரிய பொருள்களை நோக்கும்போது 'இதற்கு இது பொருள்' என்பது போல வருவதால் நான்காம் வேற்றுமையின் பொருள் 'ஏற்றுக் கொள்ளுதல்' என்பர்.

இப்பாடத்தின் வாயிலாக முதல் நான்கு வேற்றுமைகளையும் அவற்றின் பொருள்களையும், சொல்லுருபுகளையும் அறிந்து கொண்டோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 6

# A02116 வேற்றுமை - 2

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

ஐந்தாம் வேற்றுமை உருபுகள் – பொருள்கள். ஆறாம் வேற்றுமை உருபுகள் – பொருள்கள். ஏழாம் வேற்றுமை உருபுகள் – பொருள்கள் ஆகியவற்றை விளக்குகிறது. எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை பற்றிய இலக்கணச் செய்திகளை விரிவாகவும் விளக்கமாகவும் பேசுகிறது. உருபுமயக்கம், விளி ஏலாத பெயர்கள், விளி ஏற்கும் பெயர்கள் ஆகியவற்றையும் உணர்த்துகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- இந்தப் பாடம், வேற்றுமை பற்றிய முந்தைய பாடத்தின் தொடர்ச்சி. ஆதலால் அடுத்து வரும் வேற்றுமைகளை அறியலாம்.
- ஐந்தாம் வேற்றுமை முதல் எட்டாம் வேற்றுமை வரையிலான வேற்றுமைகளையும் அவற்றின் பொருள்களையும் தெரிந்து கொள்ளலாம்

## பாட அமைப்பு

6.1 ஐந்தாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

6.2 ஆறாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

6.3 ஏழாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

6.4 எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை

6.5 வேற்றுமை தொடர்பான பிற கருத்துகள்

6.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 6.0 பாட முன்னுரை

சென்ற பாடத்தில், பெயர்ச்சொற்களின் பொருள்களை வேறுபடுத்திக் காட்டும் வேற்றுமை பற்றிய செய்திகளை அறிந்தோம். வேற்றுமை எட்டு வகைப்படும் என்பதைத் தெரிந்து கொண்டோம். அவற்றுள் முதலாம் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) முதல் நான்காம் வேற்றுமை வரையிலான நான்கு வேற்றுமைகளையும் அவற்றின் பொருள்களையும் பற்றிப் பார்த்தோம்.

இனி, எஞ்சியுள்ள ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை (விளிவேற்றுமை) ஆகிய வேற்றுமைகள் பற்றிய செய்திகளை இப்பாடத்தில் அறிந்து கொள்வோம்.

## 6.1 ஐந்தாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

ஐந்தாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் இன், இல் என்பன ஆகும்.

இவ்விரண்டு உருபுகளும் பெயர்ப்பொருளை நீங்கல் பொருளாகவும், உவமைப் பொருளாகவும் (ஒப்புப் பொருளாகவும்), எல்லைப் பொருளாகவும், ஏதுப்பொருளாகவும் வேற்றுமை செய்யும்.

- நீங்கல் பொருள்

நீங்கல் பொருளாவது ஒரு பொருள் மற்றொன்றிலிருந்து விலகிச் செல்வது.

எடுத்துக்காட்டு

மரத்தின் உதிர்ந்த இலை நீங்கல்பொருள்
மலையின் வீழ் அருவி
தலையின் இழிந்த மயிர்

- ஒப்புப்பொருள்

ஒப்புப்பொருளாவது, இரண்டு பொருள்களை ஒப்பிட்டுக் கூறுவது.

எடுத்துக்காட்டு

காக்கையின் கரியது யானை ஒப்பு
கண்ணின் சிறந்த உறுப்பு இல்லை
மதியின் குளிர்ந்த முகம்

- எல்லைப்பொருள்

எல்லைப்பொருளாவது அறியப்படாத பொருளினது திசை, காலம், பண்பு முதலியவற்றைக் குறிப்பதற்கு எல்லையாக நிற்கும் பொருளாகும்.

எடுத்துக்காட்டு

சென்னையின் தெற்குச் சிதம்பரம் – திசை
கண்ணனின் இரண்டாண்டு சிறியவன் கந்தன் – காலம்
பசுவின் இழிந்தது எருமை – பண்பு
அன்பின் இழிந்தது சினம்

சென்னையின் தெற்குச் சிதம்பரம் – இதில் அறியப்படாத சிதம்பரத்தினது திசையைக் குறிப்பதற்கு எல்லையாக நிற்பது அறியப்பட்ட பொருளாகிய சென்னை. ஆதலால் சென்னை எல்லைப் பொருள் ஆகும்.

- ஏதுப்பொருள்

ஒரு பொருளின் பெருமை, சிறப்பு முதலியவற்றுக்கு ஏதுவாகும் (காரணமாகும்) பொருள் ஏதுப்பொருள் ஆகும்.

(ஏது = காரணம்)

எடுத்துக்காட்டு

கல்வியில் பெரியவர் கம்பர் ஏதுப்பொருள்

இலக்கணத்தில் சிறந்தது தொல்காப்பியம்

அழகில் சிறந்தது மயில்

வீரத்தில் சிறந்தவர் தமிழர்
கல்வியில் பெரியவர் கம்பர் என்பதில் கம்பனுடைய பெருமைக்கு ஏது – (காரணம்) கல்வி. ஆதலால் கல்வி ஏதுப்பொருள் ஆகும்.

இவை போல விட, காட்டிலும், பார்க்கிலும் என்னும் சொற்கள் வந்தும் ஐந்தாம் வேற்றுமைப் பொருளைத் தருகின்றன.

எடுத்துக்காட்டு

இரும்பை விடப்பொன் மதிப்புடையது – விட

பரங்கிமலையைக் காட்டிலும் இமயமலை

உயர்ந்தது – காட்டிலும்

வேலனைப் பார்க்கிலும் முருகன் நல்லவன் – பார்க்கிலும்

மேற்கண்ட தொடர்களில் வந்துள்ள விட, காட்டிலும், பார்க்கிலும் ஆகிய சொற்களும் ஐந்தாம் வேற்றுமைப் பொருளையே தருவதால் இவை ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபுகள் ஆகும்.

ஐந்தாவதன் உருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே

*(நன்னூல் : 299)*

## 6.2 ஆறாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

பெயரின் பொருளைக் கிழமைப் பொருளாக வேற்றுமைப்படுத்துவது ஆறாம் வேற்றுமை உருபு ஆகும். (கிழமை = உடைமை)

அது, ஆது, அ என்பன ஆறாம் வேற்றுமை உருபுகள். இவற்றுள், 'அது', 'ஆது' என்ற உருபுகள் ஒருமைக்கும், 'அ' என்ற உருபு பன்மைக்கும் வரும். 'ஆது' என்னும் உருபு இக்காலத்தில் பெரிதும் வருவதில்லை. 'அ' உருபும் வழக்கத்தில் இல்லை. எனினும் செய்யுளில் வரும்போது இவ்வுருபினை அறியலாம்.

ஆறாம் வேற்றுமைக்கு மட்டும் பயனிலை பெயராகவே இருக்கும்.

எடுத்துக்காட்டு

எனது கை – அது ஒருமை
எனாது கை – ஆது
என கைகள் – அ – பன்மை (வழக்கில் இல்லை)

ஆறாம் வேற்றுமையின் பொருள் கிழமைப்பொருள் ஆகும். (கிழமை = உடைமை) உடைமையை உணர்த்தி வருவது கிழமைப்பொருள் எனப்படும். இது தற்கிழமை, பிறிதின்கிழமை என இருவகைப்படும்.

- தற்கிழமையும் பிறிதின்கிழமையும்

தற்கிழமை என்பது தன்னோடு தொடர்பு உடைய (பிரிக்க முடியாத) கிழமை. பிறிதின் கிழமை என்பது தன்னிடமிருந்து வேறான கிழமை.

எடுத்துக்காட்டு

கண்ணனது கை – தற்கிழமை
கந்தனது வீடு – பிறிதின்கிழமை

- சொல் உருபு

ஆறாம் வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல் உருபாகும்.

எடுத்துக்காட்டு

தசரதனுடைய மகன்
தசரதனுடைய மக்கள்
என்னுடைய வீடு
என்னுடைய வீடுகள்

ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம்; ............ தற்கிழமையும்

பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே!

*(நன்னூல் : 300)*

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.3 ஏழாம் வேற்றுமையும் அதன் பொருள்களும்

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் கண் முதலாக இல் ஈறாக இருபத்து எட்டாகும். இவ்வுருபுகளில் ‘கண்’ என்பதே ஏழாம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் தலையாய உருபாகும். எனவே ஏழாம் வேற்றுமையைக் கண் வேற்றுமை என்று அழைப்பர்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும், தற்கிழமை, பிறிதின்கிழமை என்னும் இரண்டிற்கும் இடமாக வருதல் ஏழாம் வேற்றுமையின் பொருளாகும்.

கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் ஆகிய இருபத்தெட்டும் இடப்பொருள் உணர்த்தும் உருபுகள் ஆகும்.

எடுத்துக்காட்டு

பனையின் கண் உள்ள மடல் – தற்கிழமை

பொருள் பெயர்

பனையின் கண் உள்ள அன்றில் (பறவை) – பிறிதின்கிழமை
வீட்டின்கண் உள்ள அறை – தற்கிழமை

இடப்பெயர்

வீட்டின்கண் உள்ள பூனை – பிறிதின்கிழமை
நாளின்கண் உள்ள நாழிகை – தற்கிழமை

காலப்பெயர்

நாளின்கண் செய்யும் வேலை - பிறிதின்கிழமை
கையின்கண் உள்ள விரல் – தற்கிழமை

சினைப்பெயர்

கையின்கண் உள்ள வளையல் - பிறிதின்கிழமை
கறுப்பின்கண் இருக்கும் அழகு – தற்கிழமை

குணம் அல்லது பண்புப்பெயர்

இளமையின்கண் வாய்த்த செல்வம் – பிறிதின்கிழமை
ஆட்டத்தின்கண் உள்ள அபிநயம் – தற்கிழமை

தொழில்பெயர்

ஆட்டத்தின்கண் உள்ள பாட்டு – பிறிதின்கிழமை

பனையும் மடலும் ஒரே பொருள். பனை என்னும் முதல்பொருள் மடல் என்னும் தன் சினைப்பொருளுக்கு இடப்பொருள் ஆயிற்று. இது தற்கிழமை. பனையும் அதில் வசிக்கும் அன்றிலும் வேறுவேறு பொருள். பனை என்னும் பொருள் அன்றிலாகிய பிறிதின் கிழமைப் பொருளுக்கு இடப்பொருள் ஆயிற்று. இவ்வாறே பிற எடுத்துக் காட்டுகளையும் எண்ணி உணர்க. (நீங்காது இருப்பது தற்கிழமை; நீங்கி இருப்பது பிறிதின்கிழமை ஆகும்.)

இவ்வேழாம் வேற்றுமை இடவேற்றுமை என்றும் அழைக்கப்படும்.

ஏழாம் வேற்றுமைக்குக் கண் என்பது உருபு என அறியலாம். கண்ணே அன்றி, கால், கடை, இடை முதலிய பல உருபுகள் இதற்கு உண்டு. இவ்வுருபுகள் அனைத்தும் இடப்பொருளை உணர்த்தும் சொற்களாக வரும்.

எடுத்துக்காட்டு

1) கால் : நாற்றங்கால் (நாற்று வளரும் இடம்)

2) கடை : கடை நாள் கங்குல். (கங்குல் = இரவு)

3) இடை : இடைச்சுரம் (சுரம் = காட்டுவழி)

இவற்றைச் சொல் உருபுகள் என்றே கூறலாம்.

இக்காலத்து, இவ்வுருபுகளோடு பக்கம், பாங்கர், மாடு, அண்டை, அருகு, அயல், ஊடு, ஓரம், நடு போன்றனவும் சொல் உருபுகளாகக் கருதப்படும்.

எடுத்துக்காட்டு

வயல் பக்கம் சென்றான்.
சாலை ஓரம் நடந்தான்.
வீட்டு நடுவே அமர்ந்தான்.
எனவரும்.

ஏழன் உருபு கண் ஆதியாகும்
பொருள் முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப.

(நன்னூல் : 301)

கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடுஅளைதேம் உழைவளி உழி உளி
உள்அகம் புறம் இல் இடப்பொருள் உருபே

(நன்னூல் : 302)

குறிப்பு : ‘இல்’ என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமையில் வந்துள்ளதை முன்னரே நீங்கள் அறிவீர்கள். ஐந்தாம் வேற்றுமையில் ‘இல்’ என்னும் உருபு ஒப்புப்பொருளிலும்,

ஏதுப்பொருளிலும் வந்துள்ளது. ஏழாம் வேற்றுமையில் ‘இல்’என்னும் உருபு இடப்பொருளில் மட்டுமே வரும் என்பதை அறிந்து கொள்வது நன்று.

## 6.4 எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை

எட்டாம் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லை. படர்க்கைப் பெயரை முன்னிலையாக விளிப்பது அதன் பொருள் ஆகும். விளித்தல் என்பதற்கு அழைத்தல் அல்லது கூப்பிடுதல் என்பது பொருள். எட்டாம் வேற்றுமை விளிப்பொருளில் வருவதால் இது விளிவேற்றுமை எனப் பெயர் பெற்றது.

எடுத்துக்காட்டாக, 'இராமா! வா' என விளிக்கும்போது (அழைக்கும் போது) இராமன் என்னும் படர்க்கைப்பெயர் முன்னிலைப் பொருளுக்கு உரியது ஆகின்றது.

பெயர்ச்சொற்கள் விளிக்கப்படும்பொழுது பெயரின் இறுதியில் சில மாறுதல்கள் ஏற்படும். அவை, ஈறு திரிதலும் (இறுதிஎழுத்து மாறுதல்), ஈறு குன்றலும் (குறைதல்), ஈறு மிகுதலும், இயல்பாக வருதலும், ஈற்றுஅயல் எழுத்துத் திரிதலும் ஆகும். (ஈற்றயல் எழுத்து = இறுதி எழுத்துக்கு முந்தைய எழுத்து.)

எடுத்துக்காட்டு

தந்தை – தந்தாய் !
ஈறுதிரிதல் ('ஐ' என்னும் இறுதி
எழுத்து ஆய் எனத் திரிந்தது)

தங்கை – தங்காய் !
அன்னை – அன்னாய்!

மன்னன் வருக! – மன்ன! வருக
ஈறுகுன்றல் ('ன்' என்ற இறுதி
எழுத்துக் குறைந்தது)

நண்பன் – நண்ப!
புலவன் – புலவ!

அரசன் – அரசனே
ஈறுமிகுதல் (ஏகாரம் மிகுந்து வந்தது)

இறைவன் – இறைவனே
மகன் – மகனே

தம்பி – தம்பி!
இயல்பாக வந்தது.
(மாற்றம் இன்றி வருவது)

தோழி – தோழி!
மாமி – மாமி!

மக்கள் – மக்காள்
ஈற்றுஅயல் (இறுதி
எழுத்துக்கு முந்தைய
எழுத்து) நீண்டது

வணிகர் – வணிகீர்
புலவர் – புலவீர்

விளிவேற்றுமையில் ஏற்படும் மாறுதல்களை மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் தெளிவுபடுத்துகின்றன. இவை முதல் வேற்றுமைபோல இயல்பான பெயராக இல்லை. திரிந்து வந்துள்ளன.

படர்க்கை ஐம்பாலும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்) விளிஏற்கும் என்பதால் இவ்வுருபிற்கும் எழுவாய் உருபிற்கும் சொல்லால் வேற்றுமை இல்லை என்றாலும் பொருளால் வேற்றுமை உண்டு.

அப்பா வந்தார் – எழுவாய் வேற்றுமை
அப்பா தாருங்கள் – விளிவேற்றுமை

இவ்வாறு எழுவாய் வேற்றுமையிலிருந்தும் சிறிது வேறுபட்டு நிற்பதால் இதனை இறுதியில் வைத்து எட்டாம் வேற்றுமையாக இலக்கண நூலார் அமைத்தனர்.

எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபுமாம் : பொருள் படர்க்கை யோரைத்
தன்முகமாகத் தான்அழைப் பதுவே
(நன்னூல் : 303)

அண்மைவிளியும் சேய்மைவிளியும்

இவ்விளிவேற்றுமை அண்மைவிளி, சேய்மைவிளி என இரு வகைப்படும்.

அருகில் உள்ளவரை அழைப்பது அண்மை விளி; தொலைவில் உள்ளவரை அழைப்பது சேய்மை விளி.

(அண்மை = அருகு, சேய்மை = தொலைவு)

எடுத்துக்காட்டு

இராமன் – இராம!
அண்மைவிளி

அம்மா – அம்ம!
இராமன் – இராமா, இராமனே,
இராமாவோ சேய்மைவிளி
இராமாவோ என்பது புலம்பலில் வரும் விளி.

### 6.4.1 விளி ஏற்கும் பெயர்கள்

விளி ஏற்கும் பெயர்களுள் உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், பொதுப்பெயர் என்று பிரித்து அவை விளி கொள்ளும் முறையை இலக்கண நூலார் விளக்குவர்.

### 6.4.2 விளி ஏலாப் பெயர்கள் (விளி கொள்ளாப் பெயர்கள்)

தன்மைப் பெயர்கள் விளி கொள்ளா.

முன்னிலைப் பெயர்கள் விளி கொள்ளா.
படர்க்கைப் பெயர்களுள் நுமன், நுமன், நுமர் ஆகிய கிளைப்பெயர்கள் விளி கொள்ளா.
எவன், எவள், எவர், எது, எவை போன்ற வினாப்பெயர்களும்,

அவன், அவள், அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை
உவன், உவள், உவர், உது, உவை
ஆகிய சுட்டுப் பெயர்களும், தான், தாம் என்ற படர்க்கைப் பெயர்களும், மற்றையான், பிறன் போன்ற பிறபெயர்களும் விளி கொள்ளாத பெயர்கள் ஆகும்.

## 6.5 வேற்றுமை தொடர்பான பிற கருத்துகள்

வேற்றுமை உருபு ஏற்கும்போது திரியும் பெயர்கள்
சில பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது திரியும்.

வேற்றுமை உருபு ஏற்கும்போது தான், தாம், நாம் என்பவை தன், தம், நம் எனக் குறுகும். யான் என்பது என் எனவும், யாம் என்பது எம் எனவும், நீ என்பது நின் எனவும், நீர் என்பது நும் எனவும் திரியும்.

எடுத்துக்காட்டு

தான் + ஐ = தன்னை

தாம் + ஐ = தம்மை

நாம் + ஐ = நம்மை

யான் + ஐ = என்னை

யாம் + ஐ = எம்மை

நீ + ஐ = நின்னை

நீர் + ஐ = நும்மை
என வரும்.

- உருபு ஏலாப் பெயர்கள்

முன்னிலைப் பெயர்களில் நீயிர், நீவிர் என்பனவும், தன்மைப் பெயர்களில் நான் என்பதும் வேற்றுமை உருபுகளைக் கொள்ளா. இவை எழுவாயாக மட்டுமே வரும்.

எடுத்துக்காட்டு

நான் வந்தேன்
எழுவாய் வேற்றுமை

நீயிர் வந்தீர்
நீவிர் வருவீர்

- முதல் வேற்றுமைக் கருத்தாவும் மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவும்

வேற்றுமைகளில் முதல் வேற்றுமையிலும், மூன்றாம் வேற்றுமையிலும், வினைமுதல் பொருள் (கருத்தா) வந்ததைக் கண்டோம். அவற்றிடையே வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக,

தச்சன் மரத்தை வாளால் வெட்டினான் – முதல் வேற்றுமை
தச்சனால் மரம் வாளால் வெட்டப்பட்டது – மூன்றாம் வேற்றுமை
முதல் தொடரில் முதல் வேற்றுமைக் கருத்தாவாக வந்த தச்சன், இரண்டாம் தொடரில்

மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாக வந்தபோது ஆல் உருபு ஏற்றிருக்கிறது.

இவ்வாறு மாறும்போது முதல் வேற்றுமையில் செயப்படுபொருளாக (இரண்டாம் வேற்றுமையாக) வந்தது, மூன்றாம் வேற்றுமையில் எழுவாயாக (முதல் வேற்றுமையாக) மாறியுள்ளது.

மேலும், முதல் வேற்றுமைக்கு வந்த செய்வினைப் பயனிலை, மூன்றாம் வேற்றுமைக்குச் செயப்பாட்டு வினைப் பயனிலையாக மாறி உள்ளது. செயப்படுபொருள் எழுவாயாக வந்ததால் செய்வினைப் பயனிலை செயப்பாட்டு வினைப் பயனிலையாக மாறியுள்ளது.

வெட்டினான் = செய்வினை
வெட்டப்பட்டது = செயப்பாட்டுவினை

- மூன்றாம் வேற்றுமை – ஐந்தாம் வேற்றுமை ஏதுப்பொருள்கள்

மூன்றாம் வேற்றுமையிலும் ஐந்தாம் வேற்றுமையிலும் வந்த ஏதுப்பொருளில் சிறிது வேறுபாடு உண்டு. ஏது, கருவி, காரணம் என்பவை ஒரே பொருளைத் தரும் சொற்கள்.

மூன்றாம் வேற்றுமைக் கருவி (ஏது) ‘வாளால் வெட்டப்பட்டது’ என்பது போலப் புறக் கருவியாகவே பெரும்பாலும் வரும்.

ஐந்தாம் வேற்றுமைக் கருவி ‘அறிவின் அறிந்தான்’ என்பது போல அகக்கருவியாகவே பெரும்பாலும் வரும்.

- ஒரே உருபு இரண்டு இடங்களில் வரும்போது மாற்றம்

பொருளை விளக்கமாக, விரிவாகக் கூறவேண்டிய இடத்தில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்றுவரும். பொதுவாகப் பெயர்ச்சொல் ஒரே ஒரு வேற்றுமை உருபைப் பெற்றுவரும். ஆனால் சில நேரங்களில் ஒரே தொடரில் ஒரே வேற்றுமை உருபு இரண்டு இடங்களில் வருவதுண்டு. அது சிறப்பு அன்று. பொருள் விளங்கும் வண்ணம் பொருத்தமான வேறு வேறு உருபுகளை இடுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

மரத்தைக் கிளையை வெட்டினான்.

‘ஐ’ என்னும் உருபு இரண்டு இடங்களிலும் வந்து பொருள் மயக்கம் தருகின்றது. மரத்தை வெட்டினானா? அல்லது கிளையை வெட்டினானா? என்று தெரியவில்லை. ஏதாவது ஓர் இடத்தில் பொருத்தமான வேறு ஓர் உருபை இட வேண்டும்.

எடுத்துக்காட்டு :

மரத்தைக் கிளையின்கண் வெட்டினான்.
மரத்தின்கண் கிளையை வெட்டினான்.
என்றோ, ‘மரத்தினது கிளையை வெட்டினான்’ என்றோ இருத்தல் வேண்டும்.

மரம் = முதல் பொருள்
கிளை = சினைப்பொருள்

முதலுக்கும் சினைக்கும் வேறு உருபுகளை இடல் வேண்டும்.

முதலுக்கு – ‘ஐ’ உருபு என்றால் சினைக்கு – ‘கண்’ உருபு.
முதலுக்கு – ‘கண்’ உருபு என்றால் சினைக்கு ‘ஐ’ உருபு.
முதலுக்கு – அது உருபு என்றால் சினைக்கு ‘ஐ’ உருபு.

முதலை ஐயுறின் சினையைக் கண் உறும்
அதுமுதற்கு ஆயின் சினைக்கை ஆகும்

(நன்னூல் : **315**)

## வேற்றுமை உருபு மயக்கம்

இதுவரையில் எட்டு வேற்றுமைகளைக் குறித்துப் படித்தோம். செய்யுள்களில் சில இடங்களில் ஒரு வேற்றுமை உருபு வரவேண்டிய இடத்தில் இன்னொரு வேற்றுமை உருபு வந்து அமைந்து விடும். இவ்வாறு வந்து அமைந்தாலும் பொருள் மாறாது. அப்பொழுது, அங்குள்ள உருபைக் கொண்டு முடிவு செய்யாமல் பயனிலையை நோக்கிப் பொருளைக் கண்டு பிடித்து இன்ன வேற்றுமை எனக் கூறல் வேண்டும். இவ்வாறு உருபுகள் மாறி வந்து அமைவதை உருபுமயக்கம் என்பர்.

### எடுத்துக்காட்டு

பழியின் அஞ்சினான் – ‘இன்’ என்ற ஐந்தாம் வேற்றுமை
உருபு மயங்கி வந்துள்ளது. இங்கு,
பழிக்கு அஞ்சினான் – என ‘கு’ என்னும் நான்காம்
வேற்றுமை உருபு வரவேண்டும்.
எனவே நான்காம் வேற்றுமை உருபு வரவேண்டிய இடத்தில் ஐந்தாம் வேற்றுமை உருபு வந்துள்ளது. இஃது உருபுமயக்கம் ஆகும்.

### கள்வரை அஞ்சினான்.

இத்தொடர் கள்வர்க்கு அஞ்சினான் என்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் ‘கு’ உருபு (நான்காம் வேற்றுமை) வரவேண்டிய இடத்தில் ‘ஐ’ (இரண்டாம் வேற்றுமை) வந்து மயங்கி நிற்கின்றது.

## எட்டு வேற்றுமைக்கும் உரிய உருபு, பொருள், சொல் உருபுகள் பற்றிய பட்டியல்

வேற்றுமை உருபு பொருள் சொல்லுருபு

முதல் வேற்றுமை திரிபு இல்லாதபெயர் கருத்தாப்பொருள் ஆனவன் என்பவன்

இரண்டாம் வேற்றுமை ஐ செயப்படுபொருள் –

மூன்றாம் வேற்றுமை ஆல், ஆன் ஒடு, ஓடு கருவி, கருத்தா
உடன் நிகழ்ச்சி கொண்டு, உடன்
நான்காம் வேற்றுமை கு கொடை, பகை,
நட்பு, தகுதி,அதுவாதல்,
பொருட்டு, முறை பொருட்டு,நிமித்தம்,ஆக
ஐந்தாம் வேற்றுமை இல், இன் நீங்கல், ஒப்பு,
எல்லை, ஏது இருந்து,நின்று

ஆறாம் வேற்றுமை அது, ஆது, அ உடைமைப் பொருள் (பண்பு, உறுப்பு, முதலியன ) உடைய
ஏழாம் வேற்றுமை கண் முதலியன இடப்பொருள் –
எட்டாம் வேற்றுமை பெயர்கள் இயல்பும்
திரிபும் விளிப்பொருள் –

## 6.6 தொகுப்புரை

இப்பாடத்தில் ஐந்தாம் வேற்றுமை முதல் எட்டாம் வேற்றுமை வரையிலான பொருள்களை அறிந்து கொண்டோம். ஐந்தாம் வேற்றுமை உருபுகள் 'இன், இல்' என்பன. இது நீக்கப்பொருள், ஒப்புப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப்பொருள்களை உடையது.

சில இடங்களில் எல்லைப்பொருளில் இன், இல் உருபுகளின் மேல் 'காட்டிலும்', 'பார்க்கிலும்' என்பவை சொல்லுருபுகளாக ஐகாரம் பெற்று வருகின்றன. இதன் வேற்றுமை உருபுகள் வினையையும், வினையோடு பொருந்தும் பெயரையும் கொண்டு முடியும்.

ஆறாம் வேற்றுமையின் உருபுகள் 'அது, ஆது, அ' என்பன. ஆறாம் வேற்றுமையில் வருமொழி ஒருமையாக இருந்தால் அது, ஆது என்பன உருபுகளாக வரும். பன்மையாக இருந்தால் 'அ' உருபாக வரும். இது, தற்கிழமைப் பொருள்களையும், பிறிதின் கிழமைப் பொருள்களையும் உடையது.

(பெயர்ப்பொருள்) தன்னோடு ஒற்றுமை உடையது தற்கிழமை, தன்னின் வேறாகிய பொருளோடு தொடர்புடையது பிறிதின் கிழமை ஆகும்.

இவ்வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல்லுருபாகி வரும்.

ஏழாம் வேற்றுமை உருபுகள் 'கண்' முதலாக வரும் பலவாகும். இவை, வினையையும் வினையோடு பொருந்தும் பெயரையும் கொண்டு முடியும்.

கண், கால், இல், மேல் போன்றவை இடவேறுபாடுகளை உணர்த்தும் சொற்களாக வரும் என்பர்.

எட்டாம் வேற்றுமை விளிப்பொருளில் வரும். எனவே, விளிவேற்றுமை என்ற பெயரும் பெறும்.

இதன் உருபுகள் படர்க்கைப் பெயர்களின் இறுதியில் ஏ, ஓ மிகுதலும், அவ்வீறுகள் திரிதலும், கெடுதலும், இயல்பாக வருதலும், ஈற்று அயலெழுத்துத் திரிதலும் ஆகும்.

இவை ஏவல் வினையைக் கொண்டு முடியும். இவ்வுருபுகள் தம்மைஏற்ற பெயர்ப்பொருளை, முன்னிலையில் விளிக்கப்படு பொருளாக (அழைத்தல்) வேறுபடுத்தும்.

மேலும், விளி ஏற்காத பெயர்கள், விளியை ஏற்கும் பெயர்கள் தொடர்களில் வரும் உருபுமயக்கங்கள் ஆகியனவற்றையும் இப்பாடத்தின் வாயிலாகத் தெரிந்து கொண்டோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் - II

# A02111 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.‘கிளவி’ என்பதன் பொருள் யாது?
விடை:கிளவி என்றால் சொல் என்று பொருள்.

2.ஓர் எழுத்து ஒரு சொல்லுக்கு இரு எடுத்துக்காட்டுத் தருக.
விடை:ஆ, வா.

3.தனிமொழி என்றால் என்ன?
விடை:ஒரு சொல் தனித்து வந்து ஒரு பொருளைத் தந்தால் அது தனிமொழி எனப்படும்.

4.பொதுமொழியை விளக்குக.
விடை:ஒரு சொல்லே தனிமொழியாக நின்று ஒரு பொருளையும் தொடர்மொழியாகப் பிரிந்து நின்று ஒன்றுக்கு மேற்பட்ட பொருளையும் தந்தால் அது பொதுமொழி எனப்படும்.

(எ.கா) தாமரை

தாமரை என்றால் தாமரைப்பூ என்று பொருள்.

தா + மரை என்றால் தாவுகின்ற மான் என்று பொருள்.

5.பகாப்பதம் என்றால் என்ன?
விடை:ஒரு சொல்லைப் பகுதி, விகுதி என்று பிரிக்க முடியவில்லை என்றால் அது பகாப்பதம் எனப்படும்.

முன்

# A02111 தன் மதிப்பீடு : விடைகள் - II

1. இலக்கண வகையால் சொல் எத்தனை வகைப்படும்?

**விடை:** இலக்கண வகையால் சொல் நான்கு வகைப்படும்.

2. ‘வந்தான்’ என்னும் சொல் என்ன சொல்?

**விடை:** ‘வந்தான்’ என்னும் சொல் வினைச்சொல்.

3. உரிச்சொற்கள் யாவை?

**விடை:** சால, உறு, தவ, நனி, கூர், கழி, கடி

4. இயற்சொல் என்றால் என்ன?

**விடை:** கற்றவர் கல்லாதவர் ஆகிய அனைவருக்கும் எளிதில் பொருள் புரியும் வகையில் உள்ள சொல் இயற்சொல் எனப்படும்.

5. வடசொல்லை விளக்குக.

**விடை:** வடமொழி என்று குறிப்பிடப்படும் சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ்மொழியில் கலந்துவரும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.

(எ.கா) கமலம், பங்கயம்.

முன்

# A02112 தன் மதிப்பீடு : விடைகள் - I

1. திணை என்பதன் பொருள் யாது?
விடை: திணை என்றால் ஒழுக்கம் அல்லது இனம் என்று பொருள்.

2. திணை எத்தனை வகைப்படும்?
விடை: திணை இரண்டு வகைப்படும்.

3. இருதிணைப் பொதுப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
விடை: அவன் சாத்தன்.
அது சாத்தன்.

4. பால் என்றால் என்ன?
விடை: பால் என்றால் பிரிவு என்று பொருள்.

5. உயர்திணைக்குரிய பால்கள் யாவை?
விடை: ஆண்பால், பெண்பால், பலர்பால்.

6. அஃறிணைக்குரிய பால்கள் யாவை?
விடை: ஒன்றன்பால், பலவின்பால்.

7. மதிப்புப் பன்மையை விளக்குக.
விடை: மதிப்புக் கருதி ஒருவரைப் பன்மையில் கூறுவது மதிப்புப் பன்மை எனப்படும்.

(எ.கா) ஆசிரியர் வந்தார்.

8. இருபால் பொதுப்பெயர் என்றால் என்ன?
விடை: ஆண்பால், பெண்பால் ஆகிய இரு பாலுக்கும் பொதுவாய் வருவது இருபால் பொதுப்பெயர் எனப்படும்.

(எ.கா) அவன் வில்லி.
அவள் வில்லி

9. பால்களின் எண்ணிக்கையை எழுதுக.
விடை: பால்களின் எண்ணிக்கை ஐந்து.

முன்

# A02112 தன் மதிப்பீடு : விடைகள் - II

1. இடம் எத்தனை வகைப்படும்?

விடை**:** இடம் மூன்று வகைப்படும்.

2. தன்மையை விளக்குக.

விடை**:** பேசுபவர் தன்னைக் குறிப்பது தன்மை எனப்படும்.

(எ.கா) நான் வந்தேன்.

3. முன்னிலைப் பன்மை என்றால் என்ன?

விடை**:** முன்னிலை இடத்தில் பலரைக் குறிப்பது முன்னிலைப் பன்மை எனப்படும்.

(எ.கா) நீர் தந்தீர்.

4. படர்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

விடை**:** அவன் வந்தான்.

5. மூவிடப் பொதுப்பெயர் என்றால் என்ன?

விடை**:** தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களுக்கும் பொதுவாய் வரும் பெயர் மூவிடப் பொதுப்பெயர் எனப்படும்.

(எ.கா) யாம் எல்லாம்
நீவிர் எல்லாம்
அவர் எல்லாம்

முன்

# A02113 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.பண்புப் பெயர் என்றால் என்ன?

விடை: ஒன்றன் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப் பெயர் எனப்படும்.

2.முதனிலைத் தொழிற்பெயரை விளக்குக.

விடை: விகுதி பெறாமல் பகுதி மட்டும் வந்து தொழிலை உணர்த்துவது முதனிலைத் தொழிற் பெயர் எனப்படும்.

(எ.கா) அடி விழுந்தது.

3.வினையாலணையும் பெயர் என்றால் என்ன?

விடை: ஒரு வினைமுற்று வினையை உணர்த்தாமல் பெயர்த்தன்மை பெற்று வந்தாலும் பெயர்த் தன்மை பெற்று வேற்றுமை உருபை ஏற்று வந்தாலும் வினையாலணையும் பெயர் எனப்படும்.

4.தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு ஒன்றைக் குறிப்பிடுக.

விடை: தொழிற்பெயர் காலம் காட்டாது. வினையாலணையும் பெயர் காலம் காட்டும்.

5.எதிர்மறை வினையாலணையும் பெயருக்கு எடுத்துக்காட்டுத் தருக.

விடை: வராதவன்.

முன்

# A02113 தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1. ஆகுபெயர் என்றால் என்ன?

விடை: ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

2. அளவையாகு பெயர்கள் எத்தனை? அவை யாவை?

விடை: அளவையாகு பெயர் நான்கு. அவை,

1. எண்ணல் அளவையாகு பெயர்
2. எடுத்தல் அளவையாகு பெயர்
3. முகத்தல் அளவையாகு பெயர்
4. நீட்டல் அளவையாகு பெயர்

3. சினையாகு பெயரை விளக்குக.

விடை: சினைப் பொருளின் பெயர் முதற்பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) ஒரு கை குறைகிறது.

இங்கே கை என்னும் சினைப்பெயர் அந்தக் கையை உடைய மனிதனுக்கு ஆகி வந்துள்ளது.

4. உவமையாகு பெயர் என்றால் என்ன?

விடை: ஓர் உவமையின் பெயர் அந்த உவமையைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது உவமையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) சிங்கம் ஒன்று புறப்பட்டதே.

இதில் சிங்கம் என்னும் உவமைப் பெயர் சிங்கம் போன்ற மனிதனுக்கு ஆகி வந்திருக்கிறது.

5. இடவாகு பெயருக்கு எடுத்துக்காட்டுத் தருக.

விடை: ஊரே சிரித்தது.

முன்

# A02114 தன் மதிப்பீடு : விடைகள் - I

1. பால்பகா அஃறிணைப் பெயர்கள் – விளக்குக.

விடை: இன்ன பால் என்று பிரித்துச் சொல்ல முடியாத பெயர்ச்சொற்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

ஒன்றன் பாலைக் காட்டும் ‘து’ விகுதியையும், பலவின் பாலைக் காட்டுகின்ற வை, அ, கள் என்னும் விகுதிகளுள் ஒன்றையும் பெறாத அஃறிணைப் பெயர்கள் ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாய் வரும்.

(எ.டு.) குதிரை, மாடு, மரம், பறவை

2. பொதுப் பெயர்கள் – அப்பெயர் வரக் காரணம் என்ன?

விடை: உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டனுக்கும் பொதுவாய் வரும் பெயர்கள் பொதுப் பெயர்கள் எனப்படும்.

3. முறைப் பெயர் – பொதுப் பெயராவதை விளக்குக.

விடை: தாய்

- இவள்

தாய்

- இப்பசு

இங்குத் தாய் என்ற முறைப் பெயர் உயர்திணையிலும் அஃறிணையிலும் வரக் காண்கிறோம்

4. தன்மைப் பொதுப் பெயர்கள் யாவை?

விடை: தன்மையில் வரும் யான், நான், யாம், நாம் ஆகிய நான்கும் தன்மைப் பொதுப்பெயர்கள் ஆகும்.

5. முன்னிலைப் பொதுப் பெயர்களைக் குறிப்பிடுக.

விடை: நீ, நீர், நீவிர், நீயிர், எல்லீர் ஆகிய ஐந்தும் முன்னிலைப் பொதுப் பெயர்கள் ஆகும்.

6. படர்க்கைப் பொதுப் பெயர்கள் யாவை?

விடை: தாம், தான் ஆகிய இரண்டும் படர்க்கை இடத்து வரும் பொதுப் பெயர்கள் ஆகும்.

எடுத்துக்காட்டு

அவர் தாம்
அவை தாம்
அவன் தான்
அவள் தான்
அது தான்

என வரும்.

முன்

# A02114 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.சூரியன், சந்திரன் ஆகிய பெயர்கள் இருதிணையிலும் வரும் விதத்தைக் கூறுக.

**விடை:** சூரியன், சந்திரன் முதலிய பெயர்கள் இருதிணைகளுக்கும் பொதுவாய் வழங்கப்படும்.

எடுத்துக்காட்டு

சூரியன் உதித்தான் – உயர்திணை
இருதிணைக்கும்
பொதுவாக
வந்தன

சூரியன் உதித்தது – அஃறிணை
சந்திரன் தோன்றினான் – உயர்திணை
சந்திரன் தோன்றியது – அஃறிணை

2.‘தான்’ என்ற சொல் பொதுப்பெயராவது எவ்வாறு?

**விடை:** ‘தான்’ என்ற சொல் உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணைகளிலும் உள்ள ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பால்களுக்கும் பொதுவாய் வரும்.

எடுத்துக்காட்டு:

தான் சொன்னான் – ஆண்பால்
தான் என்ற பெயர் மூன்று பால்களுக்கும் பொதுவாக வந்தது.

தான் செய்தாள் – பெண்பால்
தான் மேய்ந்தது – ஒன்றன்பால்

3.‘எல்லாம்’ என்ற சொல் பொதுப் பெயராவது எங்ஙனம்?

**விடை:** எல்லாம் என்னும் பெயர் இருதிணைகளிலும், மூவிடங்களிலும் வரும். உயர்திணையில் பலர்பாலிலும், அஃறிணையில் பலவின்பாலிலும் பொதுவாக வழங்கும்.

எடுத்துக்காட்டு:
நாமெல்லாம் – தன்மை
நீவிரெல்லாம் – முன்னிலை
அவரெல்லாம் – படர்க்கை உயர்திணை
அவையெல்லாம் – படர்க்கை அஃறிணை

4. வினையாலணையும் பெயர் எவ்விடத்திற்கு உரியது?
**விடை:** வினையாலணையும் பெயர், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் உரியது.

எடுத்துக்காட்டு:

உண்டேனை (உண்ட என்னை) – தன்மை மூவிடத்திலும்
வந்தன
உண்டாயை (உண்ட உன்னை) – முன்னிலை
உண்டானை (உண்டவனை) – படர்க்கை

5.ஒருவர் என்னும் பால்பொதுப்பெயர் ஒருமைச் சொற்களோடு முடியுமா? பன்மைச் சொற்களோடு முடியுமா? தெளிவுபடுத்துக.

விடை: ஒருவர் என்னும் பால்பொதுப் பெயர், உயர்திணை ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவாய், அத்திணைக்குரிய பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டு முடியும்.

எடுத்துக்காட்டு :

ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பார்
பெண்டிருள் ஒருவர் கணவன்வழி நிற்பார்
6.தொழிற்பெயர் எவ்விடத்திற்கு உரியது?

விடை: தொழில் பெயர் தொழிலுக்குப் பெயராய் வந்து படர்க்கை இடத்திற்கே உரியதாக வரும்.

எ.டு
வருகை நன்று, பாடுதல் நன்று
7. பொருத்துக
(1) அவன்தான் – ஓடினார்
(2) நரியார் – புலவர்கள்
(3) அமைச்சர் தாம்சொன்னபடி – பறவை
(4) ஒருத்தி – மனிதன்
(5) யாம் – பாடினாள்
(6) நான் – நடந்தார்
விடை: (1) அவன்தான் – மனிதன்
(2) நரியார் – ஓடினார்
(3) அமைச்சர் தாம் சொன்னபடி – நடந்தார்
(4) ஒருத்தி – பாடினாள்
(5) யாம் – புலவர்கள்
(6) நான் – பறவை

முன்

# A02115 தன் மதிப்பீடு : விடைகள் - I

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1.பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ———- எனப்படும்.

**விடை:** பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும்.

2.இரண்டாம் வேற்றுமை உருபு ——- ஆகும்.

**விடை:** இரண்டாம் வேற்றுமை உருபு ஐ ஆகும்

.

3. வளவன் ——- (வினைப் பயனிலை ஆக்குக)
**விடை:** வளவன் படித்தான். (படித்தான், வந்தான், உண்டான் என்பது போல ஏதேனும் ஒரு பயனிலையைக் குறிப்பிடலாம்.)

4. வளவன் ——— (வினாப் பயனிலை ஆக்குக)
**விடை:** வளவன் படித்தானா?

5. வளவன் ——— (பெயர்ப் பயனிலை ஆக்குக.)
**விடை:** வளவன் மாணவன் (ஆசிரியன், பொறியாளன் என்பன போல ஏதேனும் ஒரு பெயர் குறிப்பிட்டால் போதும்.)

6. கண்ணன் வந்தான் ——— (வினாப் பயனிலை ஆக்குக.)
**விடை:** கண்ணன் வந்தானா?

கோடிட்ட இடங்களில் பொருத்தமான செயப்படு பொருள்களை அமைத்து எழுதுக.

7. கண்ணன் ——- கற்றான்.
**விடை:** கண்ணன் தமிழைக் கற்றான்.

8. இராமன் ——— அடைந்தான்.
**விடை:** இராமன் காட்டை அடைந்தான்.

9. பாண்டியன் ——- அழித்தான்.
**விடை:** பாண்டியன் பகைவரை அழித்தான்.

10. இளங்கோ அண்ணனுக்காக ——- துறந்தார்.
**விடை:** இளங்கோ அண்ணனுக்காக நாட்டைத் துறந்தார்.

11.புகழ்ந்தாரைப் போற்றி வாழ். (இதில் வந்துள்ள வேற்றுமை உருபை எடுத்து எழுதுக.)
**விடை:** புகழ்ந்தாரைப் போற்றி வாழ் – ஐ – (இரண்டாம் வேற்றுமை உருபு).

12. முதல் வேற்றுமையாவது யாது?
**விடை:** பொருளின் இயல்பான பெயரே பயனிலையோடு வரும்போது முதல் வேற்றுமை ஆகும்.

(எ.டு) கந்தன் வந்தான்.

13. வேற்றுமை என்றால் என்ன? விளக்குக.
**விடை:** பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை ஆகும். பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தப் பெயர்ச்சொல்லின் இறுதியில் வரும் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன போன்ற சொற்கள் வேற்றுமை உருபுகளாகும். வேற்றுமை எட்டு வகைப்படும்.

14.இரண்டாம் வேற்றுமைக்கு உருபு என்ன? பொருள் என்ன?
**விடை:** இரண்டாம் வேற்றுமை உருபு ‘ஐ’ அதன் பொருள் செயப்படுபொருள் ஆகும்.

(எ.டு) குடத்தைச் செய்தான்
புத்தகத்தைப் படித்தான்

முன்

# A02115 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் யாவை?

**விடை:** மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன ஆகும்.

எ.டு : பேனாவால் எழுதினான்.
நண்பனோடு விளையாடினான்.

2. மூன்றாம் வேற்றுமைப் பொருள்களைக் குறிப்பிடுக.
**விடை:** மூன்றாம் வேற்றுமையானது கருவிப்பொருள், கருத்தாப்பொருள், உடன் நிகழ்ச்சிப் பொருள் ஆகிய பொருள்களில் வரும்.

3. நான்காம் வேற்றுமை உருபு யாது?
**விடை:** நான்காம் வேற்றுமை உருபு – ‘கு’ மட்டுமே.

எ.டு: கூலிக்கு வேலை செய்தான்
தந்தைக்குப் பணம் கொடுத்தான்

4. நான்காம் வேற்றுமைப் பொருள்களைக் குறிப்பிடுக.
**விடை:** நான்காம் வேற்றுமையின் பொருள் கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என ஏழு வகைகளில் வரும்.

எ.டு

பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தான் – கொடை
யானைக்குப் பகை சிங்கம் – பகை
சாத்தனாருக்கு நண்பர் இளங்கோ – நட்பு
பெண்களுக்கு அழகு புன்னகை – தகுதி
தாலிக்குப் பொன் வாங்கு – அதுவாதல்
(பொன்னே தாலி ஆவதால்)
கூலிக்கு வேலை செய்தான் – பொருட்டு
தசரதனுக்கு மகன் இராமன் – முறை (உறவு)

5. மூன்றாம் வேற்றுமையில் வரும் சொல் உருபுகள் யாவை?
**விடை:** சொல் உருபு என்பது வேற்றுமை உருபுக்குப் பதிலாக (மாற்றாக) வருவது. மூன்றாம் வேற்றுமையில், ‘ஆல்’ என்னும் வேற்றுமை உருபுக்குப் பதிலாகக் ‘கொண்டு’ என்னும் சொல்லுருபும், ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்குப் பதிலாக ‘உடன்’ என்ற சொல்லுருபும் வரும்.

எ.டு:

ஊசியால் தைத்தான் என்பது ஊசி கொண்டு தைத்தான் எனவரும்.

அண்ணனோடு தங்கை வந்தாள் என்பது அண்ணனுடன் தங்கை வந்தாள் என வரும்.

6. கூலி வேலை – நான்காம் வேற்றுமைத் தொடராக்குக.

**விடை:** கூலிக்கு வேலை. (நான்காம் வேற்றுமைத் தொடர்)

7. துப்பாக்கி சுடு – மூன்றாம் வேற்றுமைத் தொடராக்குக.

**விடை:** துப்பாக்கியால் சுடு. (மூன்றாம் வேற்றுமைத் தொடர்)

முன்

# A02116 தன் மதிப்பீடு : விடைகள் - I

1. பொருத்தி எழுதுக.

நீங்கல் – கல்வியில் பெரியவர் கம்பர்
ஒப்பு – புண்ணில்வழி குருதி (குருதி-இரத்தம்)
எல்லை – காக்கையின் கரியது குயில்
ஏது (சிறப்பு) – இந்தியாவின் வடக்கு இமயம்.

விடை: பொருத்தி எழுதுக.
நீங்கல் – கல்வியில் பெரியவர் கம்பர்
ஒப்பு – புண்ணில்வழி குருதி
(குருதி – இரத்தம்)
எல்லை – காக்கையின் கரியது குயில்
ஏது (சிறப்பு) – இந்தியாவின் வடக்கு இமயம்.

நீங்கல் – புண்ணில்வழி குருதி
ஒப்பு – காக்கையின் கரியது குயில்
எல்லை – இந்தியாவின் வடக்கு இமயம்
ஏது (சிறப்பு) – கல்வியில் பெரியவர் கம்பர்.

2. தற்கிழமை என்றால் என்ன? சான்று தருக.

விடை: தன்னோடு ஒற்றுமை உடைய கிழமை தற்கிழமை எனப்படும்.

எ.டு:
கண்ணனது கருமை
புலியது கண்

கண்ணனிடமிருந்து கருமையையும், புலியிடமிருந்து கண்ணையும் பிரிக்கமுடியாதவாறு ஒற்றுமை உடையனவாக உள்ளன.

3. பிறிதின்கிழமைக்குச் சான்று தருக.

விடை: தன்னிடமிருந்து வேறானது பிறிதின்கிழமையாகும்.

எ.டு :

எனது பை
உனது வீடு

4. எனது கை – வேற்றுமை உருபை எடுத்து எழுதுக.

விடை: எனது கை – வேற்றுமை உருபு அது.

நிரப்புக

5. ஆறாம் வேற்றுமையின் பொருள் —— ஆகும்.

விடை: ஆறாம் வேற்றுமையின் பொருள் கிழமைப்பொருள் (உடைமைப்பொருள்) ஆகும்.

6. தன்னோடு ஒற்றுமை உடைய கிழமை ——-.

விடை: தன்னோடு ஒற்றுமையுடைய கிழமை தற்கிழமை.

7. தன்னின் வேறானது ——— கிழமை எனப்படும்.
விடை: தன்னின் வேறானது பிறிதின் கிழமை எனப்படும்.

8.பின்வருவனவற்றில் தற்கிழமை, பிறிதின் கிழமைகளை எடுத்து எழுதுக.

எனது வீடு, உனது மாடு, யானையது தந்தம், குரங்கினது வால், அவனது புத்தகம், பூனையது காது.

விடை: எனது வீடு, உனது மாடு, யானையது தந்தம், குரங்கினது வால், அவனது புத்தகம், பூனையது காது.

தற்கிழமை – யானையது தந்தம், குரங்கினது வால், பூனையது காது.

பிறிதின்கிழமை – எனது வீடு, உனது மாடு, அவனது புத்தகம், பசுவினது கன்று.

9. ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபு யாது?
விடை: ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபு உடைய என்பதாகும்.

(எ.டு) என்னுடைய புத்தகம்.

10. ஐந்தாம் வேற்றுமையின் உருபும் பொருளும் யாவை?
விடை: ஐந்தாம் வேற்றுமையின் உருபு – இல், இன் ஆகும். நீங்கல்பொருள், ஒப்புப்பொருள் (உவமை), எல்லைப்பொருள், ஏதுப்பொருள் ஆகியன ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கள் ஆகும்.

11.ஆறாம் வேற்றுமையின் உருபுகள் யாவை? அவற்றுக்குரிய பொருள் யாது?

விடை: ஆறாம் வேற்றுமையின் உருபுகள் அது, ஆது, அ என்பனவாகும். அவற்றின் பொருள் கிழமைப்பொருள் (உடைமைப்பொருள்) ஆகும்.
முன்

# A02116 தன் மதிப்பீடு : விடைகள் - II

1. ஏழாம் வேற்றுமையின் உருபும் பொருளும் யாவை?
**விடை:** ஏழாம் வேற்றுமை உருபு ‘கண்’ என்பது ஆகும். அதன் பொருள் இடப்பொருள் ஆகும்.

எ.டு: காட்டின்கண் புலி வாழும்

2. கண்ணன் – விளிவேற்றுமை ஆக்குக.
**விடை:** கண்ணா! – விளிவேற்றுமை.

3. உருபு இல்லாத வேற்றுமைகள் எவை?
**விடை:** முதல் வேற்றுமையாகிய எழுவாய் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமையாகிய விளிவேற்றுமைக்கும் உருபுகள் இல்லை.

4. விளிவேற்றுமை அடையும் மாறுதல்களை எழுதுக.
**விடை:** பெயர்ச்சொற்கள் விளி ஏற்கும்பொழுது சில மாறுதல்கள் ஏற்படும். அவை ஈறுதிரிதலும் (இறுதி எழுத்து மாறுதல்), ஈறுகுன்றலும் (இறுதி எழுத்து குறைதல்), ஈறு மிகுதலும் (இறுதி எழுத்து வேறு ஒன்று மிகுதல்), இயல்பாக வருதலும் (மாறுதல் இன்றி இருத்தல்) ஈற்று அயல் எழுத்துத் திரிதலும் (இறுதி எழுத்துக்கு முன் எழுத்து மாறுதல்) ஆகும்.

எ.டு :

தங்கை – தங்காய்! – ஈறுதிரிந்து வந்தது
நண்பன் – நண்ப! – ஈறு குறைந்தது
மகன் – மகனே! – ஈறு மிகுந்தது
தோழி – தோழி! – இயல்பாக வந்தது
மக்கள் – மக்காள்! – ஈற்றயல் எழுத்துத் திரிந்தது

5. விளி ஏலாத தன்மைப் பெயர் ஒன்றினைக் கூறுக.
**விடை:** விளி ஏற்காத தன்மைப் பெயர் – நான்.

6. விளி ஏலாத பெயர்களுள் இரண்டினைக் கூறுக.
விடை: அவன், அவள், அது போன்ற சுட்டுப்பெயர்களும், எவன், எவள், எது முதலிய வினாப்பெயர்களும் விளி ஏற்காத பெயர்கள் ஆகும்.

7.தன்மைப்பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது எப்படி மாறும்?

**விடை:** யான் என்னும் தன்மைப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது என் எனவும், யாம் என்னும் பன்மைப்பெயர் எம் எனவும் திரியும்.

யான் + ஐ = என் + ஐ – என்னை
யாம் + ஐ = எம் + ஐ – எம்மை

எனவரும்.

8.நீ என்னும் முன்னிலைப் பெயர் உருபு ஏற்கும்போது எப்படி மாறும்?

விடை: நீ என்னும் முன்னிலைப்பெயர் உருபு ஏற்கும்போது நின் என மாறிவரும்.

நீ – நின் + ஐ = நின்னை எனவரும்.

9.ஏழாம் வேற்றுமையின் உருபுகளுள் ஐந்தினைக் கூறுக.

விடை: ஏழாம் வேற்றுமை உருபுகள் இல், இடம், கண், கால், திசை என்பன.

எ.டு :

மரத்தில் கூடு இருக்கிறது.

ஆசிரியரிடம் பணிவுடன் இரு.

காட்டின்கண் புலி உள்ளது.

நாற்றங்கால்.

தேர்த்திசை இருந்தான்.

10. மகன் – என்பதை விளிவேற்றுமை உடையதாக ஆக்குக.
விடை: மகன் – விளியேற்கும்போது மகனே! எனவரும்.